# விடுதலைப்புலிகள்

குரல் - 41 | ஆடி - 1993 | அன்பளிப்பு: ரூபா 5/-


# யுத்தமா? சமாதானமா? விஜேதுங்கா அரசு தடுமாறுகிறது.

புதிய அரசு ஆட்சியேற்றதிலிருந்து இனப்பிரச்சினை சம்பந்தமாக ஒரு குழப்பகரமான நிலைப்பாட்டையே கொண்டிருக்கின்றது. சமாதான வழிமுறைகள்மூலம் தமிழரின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதா? அல்லது போரைத் தொடர்ந்தும் நடாத்தி இராணுவ வழிமுறைகள்மூலம் தீர்வு காண்பதா என்ற விடயத்தில், ஒரு தீர்க்கமான முடிவை எடுக்கமுடியாது டி. பி. விஜேதுங்காவின் அரசு தடுமாறிக்கொண்டிருக்கின்றது.

பிரேமதாசா கொல்லப்பட்டபின் சிறீலங்காவின் ஜனாதிபதி பதவியை ஏற்றுக்கொண்ட திரு. டி. பி. விஜேதுங்கா, ஆரம்பத்திலிருந்து இன்றுவரை, இனப்பிரச்சினை தொடர்பாக குழப்பமானதும் முரண்பட்டதுமான கருத்துக்களையே சொல்லி, இனப்பிரச்சினையின் தீர்வு தொடர்பான தனது தடுமாற்றத்தை வெளிப்படுத்தி வருகின்றார்.

பதவி ஏற்றவுடன், தலைவர் பிரபாகரனை நேரடியாகச் சந்தித்துப்பேச விரும்புவதாக அறிவித்திருந்தார். ஆனால் பின்னர், இலங்கைத் தீவில் இனப்பிரச்சினை என்ற ஒன்றில்லை; இங்கே பயங்கரவாதப் பிரச்சினைதான் உண்டென்று கூறி, சமாதானப்பேச்சுக்கான யோசனைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

ஆனால் இப்போது, சர்வதேசநாடுகளின் உதவியுடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முயலப்போகின்றேன் என்றும் அறிவித்துள்ளார்.

இது ஒருபுறமிருக்க, மூன்று மாதத்தில் போருக்கு முடிவு கட்டப்போவதாக அண்மையில் சூளுரைத்த விஜேதுங்கா, இப்போது மூன்று மாதத்தில் யுத்தத்தை முடிக்கஇயலாது என்று தனது முன்னைய அறிவிப்பிற்கு தானே பதிலும் கூறியுள்ளார்.

சிங்களப் போர்க் கைதிகளின் விடுதலை விவகாரம் கைக்கெட்டியும் வாய்க்கெட்டாது போனதற்குக் காரணம், புதிய அரசின் இந்தத் தடுமாற்றப் போக்கேயாகும்.

தமிழ் மக்கள் மீதான பொருளாதாரத் தடையை நீக்கி கைதிகளையும் விடுதலை செய்வதுடன், ஒரு சமாதான முயற்சிக்கான உகந்த சூழலை உருவாக்க முதலில் உடன்பட்ட விஜேதுங்காஅரசு, பின்னர் தனது நிலைப்பாட்டை வழமை போலவே தலைகீழாக மாற்றிக்கொண்டுவிட்டது.

இது போர்க்கைதிகளின் விடுதலைக்கு முட்டுக் கட்டையாக நின்றதுடன், கைதிகளின் →

## உள்ளே...


※ தமிழீழ நீதிமன்றம் - ஓர் அறிமுகம்

※ தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளருடன் செவ்வி

※ மூன்றாண்டுப்போர்: வெற்றி யார்பக்கம்?

※ அழிப்பு நடவடிக்கை-யூலை 83

※ லெப். கேணல் சார்ள்ஸ்

※ சமூக பொருளாதார வளர்ச்சித் திட்டம்

※ பள்ளிக்குப் போன பிள்ளை ஏன் வரவில்லை? கவிதை

※ சக்கைலொறி - சீதனத்திற்கு! உருவகம்




தலைவருடன் செஞ்சோலைக் குழந்தைகளின் குதூகலமான ஒரு மாலைப் பொழுது!


தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

# புலிகளின் குரல்

## இதயபூமி - I

பத்து வருடங்களுக்கு முன் சிங்கள இராணுவம் மீது திருநெல்வேலியில் நிகழ்ந்த ஒரு வரலாற்று முக்கியத்துவம் மிக்க பதுங்கித்தாக்குதலும். தமிழ்மக்கள் மீது நடாத்தப்பட்ட மிகப்பெரிய இனஅழிப்பும், இன்று ஒரு முகாம் தகர்ப்புடன் நினைவு கூரப்பட்டுள்ளது.

25.7.1993 அன்று அதிகாலை,மணலாற்றுப் பகுதியிலுள்ள மண்கிண்டிமலை இராணுவ முகாம் இருளோடுஇருளாக தகர்க்கப்பட்டு 70இற்கும் மேற்பட்டபடையினர் கொல்லப்பட்டதுடன், 193 நவீன ஆயுதங்களும் கணிசமான அளவில் வெடிப்பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

27.7.93 அன்று 'டெயிலி நியூஸ்' பத்திரிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டதைபோல, மணலாற்றுப் பகுதியில் புலிகள் இயக்கம் வெற்றிகரமாகச் செய்து முடித்த முதலாவது முகாம் தகர்ப்பு இதுவாகும்.

தகர்க்கப்பட்ட இந்த முகாம் இப்பகுதியில் பலமானதும், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததுமாகும்.

அதேவேளை, இரண்டு வருடங்களுக்கு முன் ஆனையிறவுத் தளம் மீது நடந்த ஆ. க. வெ. இராணுவ நடவடிக்கைக்குப் பின், புலிகள் இயக்கம் பெயர் சூட்டி நடாத்திய ஒரு தாக்குதல் நடவடிக்கையாகவும் இது அமைந்துவிட்டது.

தமிழீழத்தின் இதயத்தைப்போல அமைந்துள்ள மணலாற்றுப் பகுதியை மீட்பதை இலக்காகக் கொண்ட இத்தாக்குதலுக்கு, ''இதயபூமி - I'' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் வழமையில் இருந்தது போலில்லாமல் இலக்கமிடப்பட்ட இப் பெயர்சூட்டல், இனிவரும் காலங்களிலும் மணலாற்றில் இடம்பெறப் போகும் தாக்குதல் புயல்களை, எதிரிக்கு பகிரங்கமாகவே எடுத்துக் கூறுகின்றது.

"இதயபூமி-I'' தாக்குதல் நடவடிக்கை இராணுவ - அரசியல் பூகோளரீதியில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவொன்றாக உள்ளது.

சிறிதுகால இடைவெளிக்குப் பின் புலிகள் நடாத்திய பாரிய தாக்குதல் என்பதுடன், தாக்குதல் நடைபெற்றமுறை, தாக்குதல் வேகம், புலிகள் பக்கத்தில் ஏற்பட்ட குறைந்த உயிர்ச்சேதம் என்பன இத்தாக்குதலின் இராணுவ பரிமாணங்களை எடுத்துக் காட்டுகின்றன. அதுவும் சிங்களப் படைகள் விழிப்பாக இருந்த இந்தக் காலத்தில் இத் தாக்குதல் வெற்றிகரமாக நடாத்தப்பட்டமை, சிங்களத் தளபதிகளை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. அதேவேளை, இந்தப் பெரிய முகாமை அரைமணியில் தவிடுபொடியாக்கி, இருந்த ஆயுதங்களையும் புலிகள் அள்ளிச் சென்றது ஒரு சாதாரண சாதனையல்ல.

அதாவது, புலிகள் இயக்கம் பெற்றுவரும் போர்த்திறனில் ஒரு படிமுறை வளர்ச்சியாக இந்த முகாம் தகர்ப்பு பேசப்படும் என்பது உறுதி.

கடந்த மூன்று வருடங்களுக்கும் மேலாக இடைவிடாது தொடரும் போரும் - பொருளாதாரத்தடையும் புலிகளைப் பலவீனப்படுத்திவிட்டது; புலிகளின் போர்த்திறனை நலிவடையச் செய்துவிட்டது என்ற மாதிரியான மதிப்பீடுகளுக்கு, மண்கிண்டிமலை இராணுவ முகாம் தகர்ப்பு ஒரு சாட்டையடி கொடுத்துள்ளது.

'ஈழப்போர்- 2' தொடங்கப்பட்ட பின்னர் சிங்கள அரசின் படைபலம் அதிகளவில் பிரயோகிக்கப்பட்ட இடம் மணலாறுதான். மணலாற்றைப் பூரணமாக ஆக்கிரமிக்க சிங்களப் படைகள் பல இராணுவ நடவடிக்கைகளைச் செய்துவிட்டன.

அந்தளவுக்கு மணலாற்றுப் பகுதி சிங்களப் பேரினவாதத்திற்கு அவசியமாகத் தேவைப்படுகின்றது.

இதற்குப் பிரதான காரணம் மணலாற்றுப் பகுதியின் பூகோள முக்கியத்துவம்தான்.

தமிழீழத்தின் வடபகுதிக்கும் தென் பகுதிக்கும் இடையில் அமைந்துள்ள நிலப்பரப்பாக மணலாறு விளங்குகின்றது.

இந்தப் பகுதியை முழுமையாக ஆக்கிரமிப்பதன்மூலம் தமிழரின் தாயகத்தை வடக்கென்றும் கிழக்கென்றும் கூறு போட முடியும்.

அதன்பின் கிழக்கை இலகுவாகவும் - நிரந்தரமாகவும் சிங்கள மயப்படுத்த முடியுமென்றொரு நாசகாரத் திட்டத்தை, சிறீலங்கா அரசு கடைப்பிடிக்கின்றது.

இராணுவ ஆக்கிரமிப்புக்குட்பட்ட மணலாற்றின் கிராமங்களில் சிங்களவர்களைக் குடியமர்த்தி, அவர்களையும் ஆயுதபாணிகளாக்கி, தமது பிடியை இறுக்க சிங்களப் படைகள் முயன்றுவருகின்றன.

இத்தகைய சிங்களக் குடியேற்றங்களுக்கு பாதுகாப்பும் - உற்சாகமும் கொடுத்துவரும் பிரதான முகாம்களில் மண்கிண்டிமலை இராணுவ முகாமும் ஒன்றாகும்.

மணலாற்றுப் பகுதியில் சிங்களப் படைகள் நடாத்தும் ஒவ்வொரு இராணுவ நடவடிக்கையின் போதும் மண்கிண்டிமலை முகாம் பிரதான பாத்திரத்தை வகிக்கும்.

தமிழர் கிராமங்கள் மீது - காடுகள் மீது - ஆட்டிலறி எறிகணைகள் ஏவவும், நடவடிக்கையில் ஈடுபடும் இராணுவத்தினரை வழிநடாத்தும் கட்டளை மையமாகவும் மண்கிண்டிமலை இராணுவ முகாம் செயற்பட்டு வந்தது.

இத்தனை இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த - பலங்கொண்ட - படைமுகாமை மின்னல் வேகத்தில் புலிகள் தாக்கி அழித்தமை, சிங்களக் குடியேற்றவாசிகளைப் பீதியடையச் செய்துவிட்டது.

இராணுவப் பாதுகாப்பை நம்பி குடியேற்றங்களில் வாழ முடியாது என்ற உண்மையை, இந்த முகாம் தகர்ப்பு சிங்களக் குடியேற்றவாசிகளுக்கும் சுட்டிக் காட்டியுள்ளது.

மொத்தத்தில் ''இதயபூமி - I'' இராணுவ நடவடிக்கையில் புலிகள் இயக்கம் பெற்ற முழுமையான வெற்றி, சிங்களத்தேசத்தின் தரப்பில் அதிர்ச்சியையும் - ஆச்சரியத்தையும் கொடுத்த அதேவேளை, தமிழர் தரப்பில் நம்பிக்கையையும் போராட்ட உத்வேகத்தையும் கொடுத்துள்ளது. ○

# யுத்தமா? சமாதானமா?...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இன்றைய இக்கட்டான நிலைக்கும் புதிய அரசே முழுக்காரணியாகவும் அமைந்துவிட்டது.

இவ்விதமாக தமிழரின் இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காணும் உறுதிப்பாடு அல்லது உருப்படியான கொள்கைத்திட்டம் ஒன்றில்லாமல் விஜேதுங்காவின் அரசு தடுமாறுவதுடன், இனப்பிரச்சினையை மேலும் மேலும் இழுத்தடித்து, ஒரு சிக்கலான நிலைக்கே கொண்டுசெல்கின்றனர்.

தொடர்ச்சியான மூன்று வருடப் போரும் - பொருளாதாரத் தடையும் புலிகள் இயக்கத்தைப் பலவீனப்படுத்திவிட்டது என்று, சிங்கள விமர்சகர்கள்பலர் தங்களுக்குள் மகிழ்ந்து கொள்கின்றனர். இந்த நிலையில் போரைத் தொடர்ந்தால் புலிகளை நசுக்கிவிடலாம் என்ற சிங்களத் தளபதிகளின் வாதம் விஜேதுங்கா அரசைப் போருக்குத் தூண்டும் அதேவேளை, தாங்கமுடியாத அளவிற்கு வளர்ந்து செல்லும் போர்ச் செலவின் பளு, விஜேதுங்காவின் அரசைத் தடுமாற்றத்திற்குள் கொண்டுசெல்கின்றது.

வெளிநாட்டு விமர்சகர்கள் பலர் கூறுவதுபோல ஒரு பலவீனமான அரசின் பலவீனமான தலைவரான திரு. விஜேதுங்கா, சிக்கல் நிறைந்ததும் - வரலாற்றுப் பகைமை கொண்டதுமான இத்தீவின் இனப்பிரச்சினையை, சுமுகமாகத் தீர்த்துவைப்பார் என்று எப்படி எதிர்பார்ப்பது?

எனவே விஜேதுங்காவைப் பொறுத்தவரை, யுத்தத்தைத் தொடர்வதுதான் அவருக்குச் சுலபமானதாக இருக்கும்.

இருந்தபொழுதிலும் அண்மையில் புலிகளால் வெற்றிகரமாக நடாத்தப்பட்ட மண்கிண்டிமலை முகாம் தாக்குதலும் அதில் சிங்கள இராணுவத்திற்கேற்பட்ட பாரியஇழப்பும், சிங்களதேசத்தைக் கிடுகிடுக்க வைத்துவிட்டன. புலிகள் இயக்கம் இராணுவரீதியாகப் பலவீனமுற்றிருக்கின்றது என்ற மாயையையும் இந்த முகாம் தகர்ப்பு உடைத்தெறிந்துள்ளது.

இப்படியான சூழலில், தமது முகாமையே பாதுகாக்க முடியாத இராணுவம் புலிகள்மீது போரைத் தொடர்ந்து நடாத்தி, இராணுவ வெற்றியை ஈட்டப்போகின்றதா என்ற கேள்வி எழுந்துள்ளது.

அதேவேளை, இராணுவ அணுகுமுறை மூலமோ அல்லது அரசியல் அணுகுமுறைமூலமோ தமிழரின் இனப்பிரச்சினையைத் தீர்க்க சிங்கள அரசால் முடியவில்லை. இதனால்தானோ என்னவோ, சர்வதேச உதவியை நாடப்போவதாக அது அறிவித்துள்ளது! ○

## வெளிச்சம்

விடுதலைவீரர்
மனித சக்தியில் நின்று
ஓயாது செயற்பட்டால்
இலக்கை இலகுவில் அடையலாம்

❋ ❋

வியர்வை வெள்ளத்தில் தான்
உழைப்பின் மகிழ்ச்சி
குருதி வெள்ளத்தில்தான்
அவர்களின் சுதந்திரம்!

❋

தண்டனைகள்
அவமானத்தின் பொட்டுக்கள் அல்ல
எதிர்காலத்திற்கு வழிகாட்டும்
ஒளிக்கதிர்கள்!

- பெருமாள்

# தமிழீழ நீதிமன்றம்

## - ஓர் அறிமுகம் -

**புலிகள் இயக்கத்தின் நெறிப்படுத்தலின் கீழ் முதல் தடவையாக நீதிமன்றங்கள் திறக்கப்படவுள்ளன. தமிழீழ நீதிமன்றங்கள் எனப் பெயரிட்டழைக்கப்படும் இவை, இந்த ஓகஸ்ட் மாத நடுப்பகுதியிலிருந்து இயங்கத் தொடங்குகின்றன. தலைவர் பிரபாகரனின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இந்த நீதி - நிருவாக அமைப்பு செயற்படும்.**

முதலில் சுன்னாகத்தில் அமைக்கப்படும் நீதிமன்றுடன் ஆரம்பிக்கப்படும் நீதி பரிபாலனம் பருத்தித்துறை, சாவகச்சேரி, நல்லூர் என விரிவாக்கப்பட்டு பின்னர் வன்னி, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளன.

இந்த நீதிமன்றுகளின் நடைமுறைகள் மற்றும் நீதி நிருவாகத்தை பரிபாலனம் செய்யும் சட்டவிதிகளுட்பட்ட ஒரு நீதிமன்றச் சட்டக்கோவை தொகுக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான உலக நாடுகளில் உள்ளதைப் போன்றே தமிழீழத்தின் நீதிபரிபாலனத்துக்குரிய சட்டவாக்கமும் அமைந்துள்ளது. ஆயினும் சமூக முன்னேற்றத்தையும் மனித சமத்துவத்தையும் நிராகரிக்கும் சாதியம் - பெண்ணொடுக்குமுறை சம்பந்தப்பட்ட பிற்போக்குத் தனமான சமூக மரபைக் களைந்து, பாரபட்சமற்ற உன்னத சமூக அமைப்பொன்றைக் கட்டி எழுப்பும் இலட்சியத்தில் இச்சட்டவாக்கம் அதிக சிரத்தை காட்டியுள்ளது. அதேபோல ஊழல், ஏமாற்று, மோசடி, போதைவஸ்து போன்ற சமூக விரோதச் செயல்களையும் கடுமையாகக் கையாளும்வகையில் இச்சட்டவாக்கம் அமைந்துள்ளது.

''பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி விரைவாகவும் இலகுவாகவும், அதேவேளை அதிக பொருட்செலவுமின்றிக் கிடைப்பதை உறுதி செய்வதுதான்'' தமிழீழ நீதிமன்ற அமைப்பின் பிரதான நோக்கம் ஆகும்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் ஆரம்பமாவதற்கு முன்னரும்கூட சிங்கள இனவாத அரசின் நீதிபரிபாலனமானது அராஜகம் வாய்ந்ததும், சமூக அநீதிகள் மலிந்ததும், தமிழ் இன விரோதம் நிறைந்ததுமான ஒரு அமைப்பாகவே இருந்தது. விடுதலைப் போராட்டம் ஆரம்பமாகியதும் தமிழ் இனப் படுகொலையை அங்கீகரித்து - நியாயப்படுத்தும் ஒரு நிறுவனமாகவே சிறீலங்காவின் நிதிபரிபாலனம் மாறியது.

அதேவேளை, ஆயுதப்போராட்டம் தீவிரமடையத் தொடங்கியபின் விடுதலைக்கெனப் புறப்பட்ட பல ஆயுதக் குழுக்களின அராஜகங்களையும் தமிழ் மக்கள் எதிர்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கியம் ஏற்பட்டது.

இந்த அராஜகக்கும்பல்களை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து, இவர்களால் தமிழ் மக்கள் சந்தித்துவந்த துன்பதுயரங்களுக்கு ஒரு முடிவுகண்டு, தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஒரு சாதகமான சூழலை புலிகள் இயக்கம் உருவாக்கிக்கொண்டிருந்த போதே, இந்திய ஆக்கிரமிப்பு நிகழ்ந்தது.

> தமிழீழ நீதிமன்றங்களின் உருவாக்கம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்ச்சியாகும். இந்த வரலாற்றுச் சம்பவத்துடன் தமிழீழத்தின் நீதிபரிபாலனமானது ஒரு செம்மையான வடிவத்தைப் பெற்றுவிட்டது எனலாம்.

இந்திய ஆக்கிரமிப்புக் காலகட்டத்தில் தமிழீழத்தில் ஒரு காட்டுத் தர்பாரே நடந்தது. இந்தியப் படைகளின் அட்டூழியங்கள் ஒருபுறம்; அதன் கூலிப்படைகளாகச் செயற்பட்ட தமிழ்க் குழுக்களின் அடாவடித் தனம் இன்னொருபுறம்; சிங்களப்படைகளின் இனவெறி மறுபுறமாக தமிழீழ மக்கள் பெரும் இன்னல்களையும் - நெருக்கடிகளையும் சந்த்ததினர்.

ஆனால் இந்தியப் படை வெளியேற்றப்பட்டதும் வடதமிழீழத்தின் பெரும்பகுதி புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. விடுவிக்கப்பட்ட இப்பகுதிகளில் சிவில் நிருவாகத்தை ஏற்படுத்த புலிகள் இயக்கம் முயன்றது.

பாரபட்சமற்ற - சமூக அநீதிகள் களையப்பட்ட - ஒரு நீதி நிருவாகம் மெதுமெதுவாகச் செயற்படத் தொடங்கியது.

ஆரம்பத்தில் புலிகளின் அரசியல் பிரிவினர் மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து அவற்றைத் தீர்க்க முயற்சிசெய்தனர்.

பின்னர், தேர்ந்தெடுக்கப்பட்ட ஊர்ப்பெரியவர்களின் சபையிடம் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.

அதன் பின் இணக்கமன்றுகள் உருவாக்கப்பட்டு பிரச்சினைகள் சுமுகமான முறையில் தீர்க்கப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆனாலும் இந்த மக்கள் மன்றங்களினால் வழங்கப்பட்ட தீர்ப்புக்களை நடைமுறைப்படுத்த அதிகாரம் வாய்ந்த ஒரு அமைப்பு இல்லாததால், வழங்கப்பட்ட தீர்ப்புகள்கூட கணிசமான அளவில் செயற்படாமல் கிடந்தன.

ஆனால், தமிழீழ காவல்துறையின் தோற்றத்தை அடுத்து, அது சட்டம் ஒழுங்கைப் பேணத்தொடங்கியவுடன், நீதிநிருவாகமும் நடைமுறை வசதிகருதி தற்காலிகமாக காவல் துறையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

ஆனால் இப்போது, தமிழீழத்தில் நீதிபரிபாலனத்திற்கென ஒரு சட்டக் கோவை வரையப்பட்டு, அதன் அடிப்படையில் தமிழீழ நீதிமன்றங்களும் செயற்பட இருக்கின்றன. தமிழீழ நீதிமன்றங்களின் உருவாக்கம் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி ஆகும்.

> தனது கட்சிக்காரர் உண்மையிலேயே குற்றவாளிதான் என உறுதியாகத் தெரிந்தபின்பும் அக் குற்றவாளியை ஒரு சட்டத்தரணி பாதுகாக்க முற்படுவது குற்றமாகும். ஒரு சட்டத்தரணியின் விவாதத் திறமையால் ஒரு குற்றவாளி தப்பிக்கவோ அல்லது ஒரு நிரபராதி தண்டிக்கப்படவோ கூடாது என்பதுதான் இதன் நோக்கம்.

இந்த வரலாற்றுச் சம்பவத்துடன் தமிழீழத்தின் நீதிபரிபாலனமானது ஒரு செம்மையான வடிவத்தைப் பெற்றுவிட்டது எனலாம். இனி இது வளர்ந்து ஒரு முழுமையான வடிவத்தில் நீதிபரிபாலனம் செய்யும் என எதிர்பார்க்கலாம்.

இனிமேல் நீதிமன்ற சட்டக்கோவையின் அடிப்படையில், எந்தவித பாரபட்சமும் இல்லாமல், கூடிய விரைவில் பாதிக்கப்பட்டவர்கள் நீதியைப் பெற இந்த நீதிமன்ற நடைமுறை வழிகோலியுள்ளது.

குற்றவியல் சம்பந்தப்பட்ட வழக்குகளை காவல்துறையிடம் முறையிட வேண்டும். காவல்துறை உரியமுறையில் அந்த வழக்கை நீதிமன்றில் தாக்கல் செய்யும். மற்றைய சாதாரண சிவில் வழக்குகளை நேரடியாகவே நீதிமன்றில் தொடர முடியும். அதேவேளை ஒரு குற்றச் செயல் தொடர்பாக ஒருவரை காவல்துறை கைதுசெய்தால், அந்தச் சந்தேகநபர் 48 மணித்தியாலத்திற்குள் நீதிமன்றில் ஆஜர்செய்யப்படுவார். மேல் விசாரணைக்காக அவரைத் தடுத்து வைக்கவேண்டும் எனக் காவல்துறை விரும்பினால், அதற்குரிய அனுமதியை நீதிமன்றில் பெற வேண்டும்.

மனுதாரரோ அல்லது எதிர் மனுதாரரோ தனக்காகத் தானே ஆஜராகி வாதாட முடியும். அப்படி வாதாடமுடியாத ஒருவர், தனக்காக ஒரு சட்டத்தரணியை அமர்த்திக்கொள்ளலாம். பணவசதி அற்றவராயின் அரச சட்டத்தரணி ஒருவரை இலவசமாக அமர்த்திக்கொள்ளலாம். அதேவேளை, சிறீலங்கா நீதிமன்ற நடைமுறைகளைப்போல சட்டத்தரணியை அமர்த்தும் ஒருவர் தனிப்பட்டமுறையிலோ, இரகசியமாகவோ பணக்கொடுப்பனவுகளைச் செய்ய முடியாது நீதிமன்ற நிருவாகத்தின் மூலமே சட்டத்தரணிக்குரிய பணத்தைச் செலுத்தமுடியும். பணத்தின் தொகை எவ்வளவு என்பதை நீதிமன்ற நிருவாகமே நிர்ணயிக்கும்.

இதேவேளை, தனது கட்சிக்காரர் உண்மையிலேயே குற்றவாளிதான் என உறுதியாகத் தெரிந்திருந்த பின்பும் அவருக்காக நீதிமன்றில் ஆஜராகி குற்றவாளியைப் பாதுகாக்க ஒரு சட்டத்தரணி முயல்வது குற்றமாகும். அத்தகைய சட்டத்தரணிமீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க சட்டம் அனுமதித்துள்ளது.

வெறுமனே ஒரு சட்டத்தரணியின் விவாதத் திறமையால் ஒரு குற்றவாளி தப்பிக்கவோ அல்லது ஒரு நிரபராதி தண்டிக்கப்படவோ கூடாது என்பதற்காகவே, மேற்குறித்த கட்டுப்பாட்டைச் சட்டம் போட்டுள்ளது.

ஒரு வழக்கு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டு 6 மாதத்திற்குள் அதற்குரிய தீர்ப்பு வழங்கப்படவேண்டும். வழங்கப்படும் தீர்ப்பில் அதிருப்தி உறும் மனுதாரர் மேன்முறையீடு செய்ய முடியும். அந்த மேன்முறையீடு நீதிமன்றால் ஏற்றுக்கொள்ளப்பட்டால், ஒரு மேல் விசாரணைக்குழு அந்த வழக்கை ஆராய்ந்து மூன்று மாதத்திற்குள் தீர்ப்பை வழங்கும்.

தமிழீழ நீதி மன்றங்களுக்குரிய நீதிபதிகள் புலிகள் இயக்கத்தின் நீதி நிருவாகப் பிரிவினரால் நடாத்தப்படும் தமிழீழ சட்டக் கல்லூரியிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவர். இந்த நீதிபதிகள் புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்களாக இருப்பர்.

நீதிபதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தலைவரின் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொள்வர்.

தமிழீழ நீதிமன்றில் நீதிபதிகளின் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் எடுத்த சட்டத்தரணிகள் மட்டுமே, நீதிமன்ற வழக்குகள் மற்றும் சட்டவிடயங்களில் பங்குபெற சட்டம் அனுமதிக்கும். இந்த சட்டத்தரணிகளில் விரும்பியவர்கள் அரச சட்டத்தரணியாக பதிவுசெய்து கொள்ளலாம். இவர்களுக்கு மாதாந்தம் வேதனம் வழங்கப்படும். பணவசதி அற்றவர்களும் ஆதரவற்றவர்களும் இந்த அரச சட்டத்தரணிகளின்மூலம் தமக்குரிய நீதியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

நீதிமன்ற விசாரணை நடைமுறைகளைப் பொறுத்தவரை குடும்ப வழக்குகள் - பாலியல் சம்பந்தப்பட்ட அல்லது பாலியல் வன்முறைகள் சம்பந்தப்பட்ட வழக்கின் விசாரணைகள் - பகிரங்கமாக நடைபெறமாட்டாது. மற்ற வழக்குகள் பகிரங்கமாக நடைபெறும். நீதிமன்ற கட்டுப்பாடுகள் - சட்டதிட்டங்களுக்கு அமைய, பார்வையாளர்களாக பொதுமக்கள் அனுமதிக்கப்படுவர்.

எந்த ஒரு குற்றச்சாட்டுத் தொடர்பாகவும் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட தண்டம் அல்லது ஐந்து வருட கடூழியச் சிறைத்தண்டனை பெற்றவர்கள், தவறுக்கு மன்னிப்புக்கோரி, தண்டனையைக் குறைக்கும்படி தலைவருக்கு கருணை மனு அனுப்பவும் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை ஒவ்வொரு மாவீரர் தினத்தை ஒட்டி, தலைவரின் ஆணையின் பேரில், சிறிய குற்றங்களைப் புரிந்த குற்றவாளிகள் பொது மன்னிப்பு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்படுவர்.

குற்றங்களுக்குரிய தண்டனையாக அபராதம் அல்லது சிறைத்தண்டனை அல்லது இரண்டும் சேர்த்து வழங்கப்படும். கடுங்காவல் கைதிகளைத் தவிர ஏனையோர் சமூகநலத் திட்டங்களுக்கும் தேச புனர்நிர்மாண வேலைகளுக்கும் கட்டாய உடல் உழைப்பு நல்கும்படி பணிக்கப்படுவர்.

தமிழீழ நீதிமன்றங்கள் வெறுமனே மக்கள் மத்தியில் நீதி பரிபாலனம் செய்வதோடு மட்டுமல்லாது, ஒரு ஜனநாயக அரசின் மிகமுக்கிய தூணாகவும் அரசின் சக்திமிக்க ஒரு அலகாகவும் செயற்பட இருக்கின்றன. ○

# தமிழின அழிப்பு - யூலை '83

**23. 07 . 1983.**

இற்றைக்குப் பத்து வருடங்களுக்கு முன், ஒரு நடு இரவு திருநெல்வேலியில் வெடித்த ஒரு பாரிய குண்டின் சத்தம், குருநகர் சிங்களப் படை முகாமின் காவல் அரணில் அரைத்தூக்கத்திலிருந்த 'சென்றி'யைத் திடுக்கிட்டெழவைத்தது.

அந்தக் காலம் யாழ். வீதிகளெங்கும் சிங்களப் படையின் வாகனங்கள் உறுமியபடி ஆதிக்கம் செலுத்திய நேரம்; சிங்கள மொழிக் கட்டளைகளுக்குத் தமிழர்கள் அஞ்சி நடந்த காலம்.

மாதகல் சிங்களப் படைமுகாமிலிருந்து '.:போ பிறாவோ' என்ற சங்கேதப் பெயருடன், ஒரு ரோந்து அணி இரவு வலம்வரத் தொடங்கியது.

இராணுவத்தைத் தாக்கப் பதுங்கியிருக்கும் புலிகளை மடக்குவது இந்த அணியின் பணி.

உரும்பிராய்ச் சந்தியில் சில நிமிடங்கள் தங்கிநின்று 'அங்கொன்றுமில்லை' என தனது கட்டளைப் பணியகத்திற்குத் தகவல் அனுப்பிவிட்டு, பலாலி வீதிவழியே யாழ்நகர் நோக்கி அந்த அணி செல்கின்றது.

அந்த ரோந்து அணியில் ஒரு ஜீப், ஒரு ட்றக், ஒரு 2 ஆவது லெப். தலைமையில் 14 இராணுவத்தினர்.

திடீரென இந்த ரோந்து அணியின் வானொலித் தொடர்பு துண்டிக்கப்படுகிறது.

பலாலி, குருநகர், இராணுவ முகாம்களுடன் தொடர்பு சாதனங்கள்மூலம் தொடர்பு கொண்டு மாதகல் முகாம் தேடுகின்றது.

குருநகர் இராணுவ முகாம் சென்றி, தான் கேட்ட சத்தத்தைத் தனது மேலதிகாரிகளுக்குத் தெரியப் படுத்துகிறான்.

எதுநடந்திருக்கலாம் என அவர்கள் ஊகிக்கின்றனர்.

வேட்டைக்குப் புறப்பட்ட '.:போ பிறாவோ' வேட்டையாடப்பட்டு விட்டது!

ஆனாலும் எங்கிருந்து சத்தம் வந்தது என சரியாக ஊகிக்க முடியவில்லை. எனவே காணாமற் போன ரோந்து அணியை எங்கே தேடுவது?

அப்போது, கோண்டாவில் பஸ் டிப்போவிலிருந்து ஒரு இராணுவச் சிப்பாய் பதட்டமான குரலில், அவசரமாக பலாலியைத் தொடர்பு கொண்டு, திருநெல்வேலி தபாற் பெட்டிச் சந்திக்கருகில் நடந்து முடிந்த பூகம்பத்தைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தான்.

நான்கு திசைகளாலும் இராணுவத்தினர் பதுங்கிப் பதுங்கி திருநெல்வேலிக்கு வர, அங்கே இறந்து கிடந்த 13 இராணுவத்தினரது இரத்தமும் உறைந்துவிட்டது.

அதன்பின் அருகே வீடுகளில் இருந்த தமிழர்கள் படுகொலை செய்யப்படுகின்றனர். அடுத்தநாள் காலை பாடசாலை மாணவர்கள் சென்ற மினிபஸ் இடைநிறுத்தப்பட்டு, மாணவர்கள் வரிசையாக நிற்கவைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

24. 07. 1983 அன்று மாலை 6 மணிக்கு, இறந்த இராணுவத்தினரது உடல்கள் பலாலியிலிருந்து இரத்மலானைக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

குடும்பத்தவர்களிடம் உடல்கள் கொடுக்கப்படுவதற்குப் பதிலாக - வழமைக்கு மாறாக - சடலங்கள் கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்பட முயற்சிகள் ஆரம்பமாகின. இறுதிக் கிரியைகளில் பங்குபற்ற வந்த சிங்களவர்கள் நள்ளிரவளவில் வெறிகொண்டெழுகின்றனர். தமிழர்களது சொத்துக்களுக்கு தீ மூட்டும் படலம் ஆரம்பமாகின்றது.

காரிருளைக் கிழித்துக்கொண்டு தமிழர்களின் சொத்துக்கள் கொழும்பு மாநகருக்கு வெளிச்ச மூட்டிக்கொண்டிருந்தன.

அடுத்துவந்த சில நாட்கள் தென் இலங்கையில் வசித்த தமிழர்களுக்கு நரகமாகியது. அத்துடன் இது சிங்கள வெறியர்களால் ஆளப்படும் ஒரு நரகத்தீவு என்ற உண்மையும் உலகம் முழுவதும் பரவியது.

நூற்றுக்கணக்கில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

தமிழர்களது சொத்துக்கள் சூறையாடப்பட்டு அழிக்கப்பட்டன.

கொழும்பு மாநகரில் மட்டும் 18000 வீடுகள் எரிக்கப்பட்டோ அல்லது சேதமாக்கப்பட்டோ இருந்தன என, அறிக்கைகள்கூறின. தமிழ்மக்களுக்கு சொந்தமான 3500 வர்த்தக நிலையங்கள் தீயிட்டழிக்கப்பட்டன என, கொழும்பு வர்த்தகர் சங்கம் அறிக்கைவிட்டது.

மனிதகுலம் திடுக்கிடக்கூடிய அளவுக்கு, வெலிக்கடைச்சிறையில் பெரும் படுகொலை நிகழ்வுகள் நடந்தேறின.


## தமிழர்களைக் கொலைசெய்வதன்மூலம் வசதியாக வாழலாம்!

**- ரூபவாகினி தொலைக்காட்சியின் பிரச்சாரம் -**

27.07.1983 - தமிழர்களுக்கெதிரான வன்முறையின் உச்சக்கட்டம். அன்றிரவுதான் இரண்டாவது வெலிக்கடைப் படுகொலை நடைபெறுகின்றது. அதேதினம் இரவு ரூபவாகினி ஒரு சிங்கள நாடகத்தை ஒளிபரப்பியது.

அதன் கரு என்னவெனில்...... மூன்று நண்பர்களில் ஒருவன் நேர்மையான வழியில் உழைக்க, மற்றவன் களவுகளைச் செய்வதன் மூலம் சம்பாதிக்கிறான். இவனுக்கு மற்றைய இரு நண்பர்களும் புத்திமதிகூறியும் அவன் கேட்கவில்லை. ஒரு நாள் தமிழ்ப் பெரியார் ஒருவர் அவனுக்கு அறிவுரைகள் சொல்ல, அவன் அப்பெரியாரைக்கொலைசெய்து மட்டு அவருடைய உடைமைகளைக்கொள்ளையடித்துச்சென்று, ''நீங்கள் இவ்வளவு நாட்களும் உழைக்க முடியாததை நான் ஒரு தமிழனைக் கொன்றதன்மூலம் சம்பாதித்துவிட்டேன்'' என தன் நண்பர்களிடம் கூற, அவர்களும் அவனது வழியைப் பின்பற்றுகின்றனர்.

ஆதாரம்: 'தமிழின விடுதலை' இதழ் 2 ஐ ஆதாரமாகக் காட்டி 'தளிர்' சஞ்சிகை (புரட்டாதி - ஐப்பசி 1983)




'பேய்களின் தீவு' என்ற தலைப்பில், 83 யூலை வன்செயல்பற்றி 'த வீக்' சஞ்சிகை பிரசுரித்த கட்டுரையொன்றிற்கான படம்.

இவைகள் தவிர மலையகம், திருக்கோணமலை உட்பட மேலும் பல இடங்களில் தமிழர் வதை நிகழ்ந்தது.

இவை அனைத்தும் நன்கு திட்டமிடப்பட்டுச் செய்யப்பட்டன இத்திட்டமிடலின் சூத்திரதாரிகளாக சிங்கள அமைச்சர்களும் - அரசியல்வாதிகளும், சிங்களப் பொலிஸ் அத்தியட்சகர்களும், இராணுவ அதிகாரிகளும் இருந்தனர்.

ஜே. ஆர். அரசு இந்தச் சிங்கள வெறித்தனத்திற்கு எண்ணெய் ஊற்றி மறைமுக ஆதரவு தெரிவித்தது.

தமிழ் இனச் சங்காரம் முடிந்த பின், இதற்கு யார் காரணம் என்ற கேள்வி எழுந்தபோது சிறீலங்கா அரசு கூறிய பதில், ''தமிழர்கள்தான் காரணம்.''

உடுத்த உடைகளுடன் உயிர் காக்க வேண்டி புகலிடங்களை நோக்கி ஓடித் தமிழர்கள் அல்லலுற்றுக்கொண்டிருந்தபோது, சிறீலங்கா ஜனாதிபதி ஜே. ஆர். கூறினார்:

"மக்களை அச்சுறுத்த இனி ஒரு பொழுதும் தமிழர்களை அனுமதிக்கமாட்டேன்'' (The Week, Aug. 22 - 27, 1983 ). அவர் 'மக்களை' என்று விளித்தது சிங்களவர்களையே என்பது, சொல்லாமலே புரியும்.

1983 யூலைதமிழினப்படுகொலை திடீரென ஏற்பட்ட வன்செயல் அல்ல.

அது, இரண்டு மாதங்களாக திட்டமிடப்பட்ட ஒரு செயல்.

1983 மே மாதம் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ் மக்கள், விடுதலைப் போராட்டத்தின் பக்கம் நின்றார்கள். இதற்காகத் தமிழர்களைப் பழிவாங்கவும், பயமுறுத்திப் பணிய வைக்கும் எண்ணத்துடனும், தமிழ் மக்களுக்கு எதிரான ஒரு வன்செயலுக்கு ஜே. ஆரின் அரசு தூபமிட்டது.

இதற்காக சிங்களப் படைகளைத் தயார்ப்படுத்தவும், நீதிவிசாரணைகளை இல்லாது செய்து தமிழினப் படுகொலையை மறைக்கவும், முதலில் அரசு சட்டம் ஒன்றை இயற்றியது.

''ஆயுதப்படையைச் சேர்ந்த எவரும் பயங்கரவாதி எனச் சந்தேகிக்கும் எவரையும் சுடலாம்; அதற்கு நீதிமன்ற விசாரணை நடைபெறாது'' என்ற ஒரு சட்டமூலம், 03. 06 1983 இல் நிறைவேற்றி வைக்கப்பட்டது. அதற்குமுதல் நாள் (02.06 1983), வவுனியா நகர் இராணுவத்தால் தீக்கிரையாக்கப்பட்டது.

தமிழ் மக்களுக்கு எதிரான இச்சட்டமூலத்தின் பின் நிகழ்ந்த தமிழர் மீதான வன்முறையை, 'தளிர்' (புரட்டாதி - ஐப்பசி, 1983) இதழ் பின்வருமாறு கோவைப்படுத்துகின்றது:

05 . 06 . 1983 ( தினபதி )

* குருநாகலில் கலவரம். ஒருவர் பலி, 25 கடைகள் தீக்கிரை.

* மட்டு - கொழும்பு புகையிரதம் கணேவத்தை என்னும் இடத்தில் தாக்குதலுக்கு உள்ளானது.

08. 06 1983

* நிக்கவரெட்டிய. நாவலப்பிட்டி பகுதிகளில் பதற்றம்.

* இரத்மலானையில் அப்போதிக்கரி சங்கத் தலைவர் வாள் வெட்டுக்குப் பலி.

* பொல்காவலயில் அசம்பாவிதம்; அரசியல்வாதி சம்பந்தமாம்.

09 06. 1983

* குமார் பொன்னம்பலத்தின் கறுவாகாடு இல்லத்திற்கு கைக்குண்டுவீச்சு.

10. 06, 1983

* பேராதனைப் பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள் மீது முகமூடி மனிதர்கள் தாக்குதல்.

11. 06. 1983

* திருமலையில் கலவரம்

12. 06, 1983

* திருமலை நாடாளுமன்ற ஊழியர் வீட்டுக்கு கைக்குண்டு வீச்சு.

27. 06. 1983

* திருமலையில் இருந்து யாழ். நோக்கி வந்த ஒரு பஸ் வண்டி காடையர்களால் வழிமறிக்கப்பட்டு, தீ மூட்டப்பட்டது.

(5ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்நாட்டு அரசியலில் மீண்டும் தமிழ்த் தேசியவாதம்?

தமிழ்நாட்டின் அரசியல் களம் இப்போது கொழும்பினதும் புதுடில்லியினதும் விசேட கவனத்தை ஈர்த்துள்ளது. இதற்குக் காரணம் 5 கோடி மக்களைக் கொண்ட தமிழ்நாட்டில் மீண்டும் தமிழ்த் தேசிய எழுச்சி தலைதூக்கி வருகின்றதா என்ற ஐயம்தான்.

இந்த ஐயத்தை உறுதிப்படுத்தும் வகையில், அண்மைக்காலமாக நடந்துவரும் சில சம்பவங்கள் எதிர்காலத்தில் தமிழ்நாட்டில் அரசியல் பூகம்பத்தை ஏற்படுத்திவிடுமோ என்று, பல அரசியல் விமர்சகர்கள் அங்கலாய்க்கின்றார்கள்.

உறைந்துகிடக்கும் தமிழ்நாட்டின் தமிழ்த் தேசியவாதத்தை அவ்வப்போது கிளறிவிடும் காரணிகளாக இந்தி எதிர்ப்பு உணர்வும், காவிரி நீர்ப் பிரச்சினையும் இருப்பதுண்டு. ஆனாலும் தேவை ஏற்படும்போது இவற்றைக் கையிலெடுத்து தமிழ்த் தேசிய உணர்வைக் கிளறி, அவற்றை வாக்கு வேட்டைக்குப் பயன்படுத்திய பின் கைவிட்டுவிடும் வழக்கத்தைத்தான், திராவிடக் கட்சிகள் தமது மரபாகக்கொண்டுவருகின்றன.

ஆனால் இப்போது ஒரு புதிய தலைமை தமிழ்நாட்டின் தமிழ்த் தேசிய எழுச்சிக்குப் புத்துயிர் அளிக்க முயல்கின்றது என்ற செய்தி, தமிழ் இனத்திற்கெதிரான சக்திகளை (இந்தியா – இலங்கை உட்பட) கலவரப்படுத்தியுள்ளது.

திராவிட முன்னேற்றக்கழகத்திற்குள்ளேயே ஒரு சக்திமிக்க தலைவனாக வளர்ந்துவரும் திரு. வை. கோபாலசாமியே, அத்தமிழ்த்தேசியவாதத்திற்குத் தலைமை கொடுக்கின்றார் என்று கருதப்படுகின்றார்.

இந்திய ஆக்கிரமிப்புக் காலகட்டத்தில், தனது உயிரையும் பொருட்படுத்தாது தமிழீழம் வந்து, மணலாற்றுக் காட்டுக்குள் சென்று தலைவர் பிரபாகரனைச் சந்தித்து, ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாகக் குரல் கொடுத்தவர் இவர் என்பது, குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டின் நவீன தமிழ்த் தேசியவாதத்திற்கு அரசியல் தலைமை கொடுத்து, அதன் உச்சக்கட்டமாகப் பிரிவினைக் கோரிக்கையை முன்வைத்து, ஒரு காலகட்டத்தில் தமிழ்நாட்டு மக்களின் பேராதரவையும் தி. மு. க. பெற்றிருந்தது.

ஆனாலும், இந்திய மத்திய அரசின் மிரட்டலுக்குப் பயந்தும், பதவி சுகங்களுக்கு ஆசைப்பட்டும் தி. மு. கவின் தலைமையே தமிழ்த் தேசிய எழுச்சியை மழுங்கடித்தது. இருந்த பொழுதிலும் தி. மு. க. வின் இடைநிலைத் தலைவர்கள் மத்தியிலோ, அடிமட்டத் தொண்டர்கள் மத்தியிலோ தமிழ்த் தேசிய உணர்வு சீரழிந்ததாகச் சொல்லமுடியாது. ஏனெனில் தி.மு. கவின் அத்திவாரமே தமிழ்த்தேசியவாதம்தான்.

இந்த நிலையில் கடந்த சில வாரங்களாக தமிழ்நாட்டில் நிகழ்ந்து வரும் சில சம்பவங்கள் தமிழ்நாட்டின் தமிழ்த் தேசியவாதத்திற்குப் புத்துயிர் ஊட்டிவருகின்றன.

காவிரி நீர்ப் பிரச்சினை தொடர்பாக தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் ஒரு புறமும், தி. மு.கழகத்தினுள் நடக்கும் உட்கட்சிப் பிரச்சினைகள் – அவற்றின் பரிமாணங்கள் மறுபுறமுமாகத் தமிழ்நாட்டின் தேசிய அரசியல் சூடுபிடித்துள்ளது.

காவிரி நீர்ப் பிரச்சினை தொடர்பான ஜெயலலிதாவின் செயல்கள் குறுகிய அரசியல் நோக்கங்கள் கொண்டவை என்பதில், எந்தவித சந்தேகமுமில்லை. ஆனால் அந்தக் காவிரி நீர்ப் பிரச்சினை தமிழக மக்களின் தேசிய உணர்வுடன் சம்பந்தப்பட்டது என்றவகையில், அது முக்கியமானதொன்றாகும்.

தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் என்று அழைக்கப்படும் தஞ்சை மாவட்ட மக்களின் பொருளாதார வாழ்வு, இந்த ஆற்று நீரில்தான் தங்கியுள்ளது.

இதேபோன்றுதான் இந்தி எதிர்ப்புப் பிரச்சாரமும் இப்போது தமிழகத்தில் சூடுபிடித்துக்கொண்டிருக்கின்றது.

கொங்கிரஸ் – அ. தி. மு. க. உறவு முறிந்தபின், அ. தி. மு. கவின் தமிழ்நாடு அரசு கலைக்கப்படலாம் என்ற அபிப்பிராயம் மேலோங்கியிருந்தது.

இதனால், தி. மு.க. தலைமை மீண்டும் பதவிக்கு வருவதற்காக, இந்தி எதிர்ப்பு ஆயுதத்தைக் கையிலெடுத்தது.

ஆயினும் செல்வி ஜெயலலிதாவினதும் அவரது மந்திரிகளினதும் கோமாளித்தனமான செயற்பாடுகளினாலும் பலவீனமான ஆட்சியினாலும், தமிழ்நாட்டில் ஜெயலலிதாவின் செல்வாக்கு சரியத்தொடங்கியது.

இந்த நிலையில் தமிழ்நாடு சட்டசபைக்கான தேர்தல் நடந்தால் தி. மு. க. தான் வெற்றி பெறும் என்ற கருத்தும் பலமடையத் தொடங்கியது. இந்தக் கருத்தில் நம்பிக்கை கொண்ட தலைமை, வாக்கு வேட்டைக்காகத் தனது இறுதி முயற்சியான இந்தி எதிர்ப்பு ஆயுதத்தை உடனடியாகப் பயன்படுத்த வேண்டிய தேவை இல்லை என்பதை உணரத் தொடங்கியது. எனவே தனது இந்தி எதிர்ப்பு நடவடிக்கைகளைச் சத்தமின்றிக் கைவிட்டது.

ஆனாலும் கட்சியின் ஒருபிரிவினர் – இளைஞர்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட இடைநிலைத் தலைவர்கள் மற்றும் சில மூத்த தலைவர்களும்- இந்தி எதிர்ப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் செயற்படுத்தி வருகின்றனர்.

இப் பிரிவினரின் நோக்கம் உண்மையில் இந்தி மேலாதிக்கத்தை முறியடிப்பதுதான். இந்தியா? இந்தியாவா? என்பதுதான் இவர்களின் பிரதான கோஷம். தொடர்ந்தும் இந்தி திணிக்கப்பட்டால், இந்தியாவிற்குள் தமிழ்நாடு இருக்க மாட்டாது என்பதுதான் இதன் பொருள்.

'இலட்சியப்பாதை' என்ற ஒரு வார இதழில் திரு. வை. கோபாலசாமி இப்படி எழுதுகிறார்: ''விரைவாக நடந்தேறி வரும் சம்பவங்கள் உலகிற்கு ஒரு விடயத்தைக் கூறுகின்றன. அதாவது, 21 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்தியாவின் வரைபடம் புதிதாக வரையப்படும்......''

பிரபல திரைப்பட நடிகர் சத்தியராஜ் 'தேவி' வார இதழ் மூலம் இப்படிச் சொல்கின்றார்:

''தொடர்ச்சியாக இந்தி திணிக்கப்பட்டால் தமிழ்நாட்டு மக்கள் சேர, சோழ, பாண்டிய அரசர் காலத்தில் தமிழர்கள் சுதந்திரமாக இருந்த காலத்தை நினைத்துப்பார்க்க வேண்டியிருக்கும்.''

(11 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழின அழிப்பு...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

கருகி மாண்டவர்கள் போக, எஞ்சியோர்க்கு சம்பவம் நடந்த இடத்திலேயே உதவிய திருநாவுக்கரசு என்பவரும் அவரது மனைவி பிள்ளைகளும் அடுத்த நாள் படுகொலை செய்யப்பட்டு, எரிக்கப்பட்டனர்.

இவ்வளவு இன வன்செயலும் ஒருபுறத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்க, 12. 07. 1983 அன்று 'டெய்லி ரெலிகிராம்' என்ற சஞ்சிகைக்கு ஜே. ஆர். அளித்த பேட்டியில், வடபகுதி தமிழ் மக்களின் கருத்தை அறியும் எண்ணம் தனக்கில்லை என்றும் அவர்தம் கஷ்டங்களைப்பற்றி அக்கறைகொள்ளத் தயாரில்லை என்றும் கூறி, தமிழர்களுக்கெதிரான வன்முறைகளை மேலும் தூண்டினார்.

கொழும்பில் தமிழர்மீதான தாக்குதல் தொடங்கி ஓரிரு நாட்களின் பின்னர், உலங்கு வானூர்தி மூலம் காமினி திசாநாயக்கா நுவரெலியா செல்கின்றார். அதுவரை மயான அமைதியுடன் இருந்த நுவரெலியா, பின்னர் பற்றி எரியத் தொடங்கியது. யாழ். நூல்நிலையம் கொளுத்தப்பட்டபோதும் இதே காமினி திசாநாயக்கா யாழ்ப்பாணத்தில் நின்று, யாழ்நகர் எரிப்பை ஊக்குவித்தார் என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

சிறிமாவோ பண்டாரநாயக்காவின் சுதந்திரக் கட்சியைவிட ஜே. ஆரின் ஐக்கிய தேசியக் கட்சி குறைந்தளவு இனவாதம் உடையது என, தென் இலங்கையில் வாழும் தமிழர்கள் நம்பினர்.

அதனால்தான் அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியையே பெரும்பாலும் ஆதரித்தனர்.

1977 தேர்தலில் தமிழர்களின் வாக்குகளைப் பெற்று பிரேமதாசாவும் ஜே ஆரும் தத்தம் தொகுதிகளில் அமோக வெற்றியீட்டியிருந்தனர்.

ஆனால் 1983 யூலை வன்செயலில், பிரேமதாசாவின் சொந்தத் தொகுதியான கொழும்பு மத்தியில் உள்ள 'பெற்றா பசாரில்' இருந்த முழுத் தமிழரின் கடைகளும் சூறையாடப்பட்டு தீயிடப்பட்டன. (The Week, Aug. 1983).

ஜே. ஆரின் சொந்தத் தொகுதியில் உள்ள தமிழர்களின் இடமான வெள்ளவத்தை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு இருந்தது. வன்செயல் முடிந்த கையுடன் வெள்ளவத்தையைச் சேர்ந்த ஒரு தமிழ்ப் பெண்மணியைச் சந்தித்து 'த வீக்' நிருபர் கேட்டபோது அவர் சொன்னார்: ''நாங்கள் (தமிழர்கள்) ஜே. ஆரை ஆதரித்ததற்கான சன்மானம்தான் இது.'' (The Week, Aug. 1983).

வன்செயலில் ஈடுபட்ட சிங்களவர்கள் அணியணியாக ஈடுபட்டனர். ஒவ்வொரு அணியும் ஒருவரின் வழிநடத்தலில் செயற்பட்டது. ஒவ்வொரு அணித் தலைவரிடமும் தேர்தல் இடாப்பு இருந்தது. தமிழர்களின் இருப்பிடங்களைக் கண்டுபிடிக்க அந்தத் தேர்தல் இடாப்பைப் பயன்படுத்தினார்கள். (T. D.S. A. திசாநாயக்காவின் ''சிறீலங்காவின் துயர்' ).

இந்த யூலை வன்செயலில் உச்சக்கட்டக் கொடூரமாக வெலிக்கடை சிறைச்சாலைப் படுகொலைகள் அமைந்திருந்தன.

அரசாங்கத்தின் உச்ச பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த தமிழ்க் கைதிகளில் 53 பேர் மிகவும் இலகுவான முறையில், கொடூரம் பயன்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர்.

கொல்லப்பட்ட தமிழர்களின் கண்கள் தோண்டப்பட்டதும், இரத்தம் குடிக்கப்பட்டதுமான காட்டுமிராண்டி நடவடிக்கைகளும் இப்படுகொலையில் இடம்பெற்றுள்ளன.

தானிறந்தபின் தனது கண்ணை தமிழர் ஒருவருக்குத் தானம்செய்ய வேண்டும் என்ற விருப்பத்தை வெளியிட்ட குட்டிமணியினது கண்களைத் தோண்டி, புத்தகோவிலுக்குக் காணிக்கையாகக் கொடுத்தனராம்.

இந்த மிருகத்தனங்களை ஒரு சிங்கள இனவாதியான நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரே நாடாளுமன்றில் கூறி, அதை உறுதி செய்திருந்தார்.

இந்த வெலிக்கடைப் படுகொலைகள் சேபால எக்கநாயக்க என்ற ஒரு விமானக் கடத்தல்காரனின் தலைமையிலேயே நடைபெற்றது. இவனை அவ்விதம் செய்யும்படி ஒரு சிங்கள அரசியல்வாதி தூண்டியிருந்தார். இதற்கு சிறை அதிகாரிகளும் தமது ஆதரவை நல்கினர்.

எந்தவேளையும் பூட்டப்பட்டு மிகவும் பாதுகாப்பாக இருக்கும் ஆயுத அறையைத் திறந்து அலவாங்கு, மண்வெட்டி, சவள், பொல்லு போன்ற ஆயுதங்களை எடுத்து, கைதிகளாக இருந்த தமிழர்களைச் சிங்களக் கைதிகள் தாக்கிக் கோரமாகக் கொன்றனர்.

இந்தப் படுகொலைகள் ஒருமுறையுடன் நின்றுவிடவில்லை. இருதடவைகள் நடந்தன. 25. 07. 1983 அன்று முதல் தடவையும், 27. 07.1983 அன்று இரண்டாவது தடவையும் நடந்தன.

விமானக் கடத்தலுக்காக ஆயுள் தண்டனை அனுபவித்தபடி இருந்த சேபால எக்கநாயக்க, இப்படுகொலைகளுக்குத் தலைமைதாங்கியதற்குப் பிரதி உபகாரமாக, அடுத்து வந்த வருடங்களில் விடுதலை செய்யப்பட்டுவிட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. ○

# ஓயாத அலைகளில் எழுதிய காவியம்

அன்றொரு காலம் -

சிங்களக் கடற்படையின் படகுகளைக் கண்டால் எங்களது சாதாரண படகுகள் கடலில் நிற்காது; நிற்கமுடியாது.

சண்டைகளுக்கென்றே தயாரிக்கப்பட்ட நேவிப்படகுகளின் வேகத்திற்கும், அவற்றில் பொருத்தப்பட்டிருக்கின்ற சக்திவாய்ந்த ஆயுதங்களின் தாக்குதலுக்கும் ஈடுகொடுக்க, எங்களது சாதாரண படகுகளால் முடியாது என்பதால் - தூரத்தில் கண்டவுடனேயே ஓடி மறைந்துவிட வேண்டும்; வேறு வழியில்லை. எங்கள் படகுகளை அழிப்பது அவர்களின் இலக்கு என்பதுடன் - கலைப்பது அவர்களுக்கு ஒரு பொழுதுபோக்காகவும் இருந்தது.

ஆனால் இன்று, அந்தநிலை நேர்மாறாக மெல்ல மெல்ல மாறிவந்துவிட்டது.

தரையைப்போல கடலிலும் சிங்களப்படையைத் துரத்தித் தாக்கி அழிக்கலாம் எனச் சொல்லித்தந்தவனும், முதன்முதலாக மட்டுமல்ல - தொடராகவும் அதனைச் செய்துகாட்டியவனும்தான் எங்கள் சாள்ஸ்.

1991 இன் இறுதியில் அது ஆரம்பித்தது.

நயினாதீவிலிருந்து ஊர்காவற்துறைக்கு கடல்ரோந்து புரிகின்ற நேவிப் படகுகளை வழிமறித்துத் தாக்க சாள்ஸ் முடிவெடுத்தான்.

தளபதி கங்கைஅமரனின் துணையோடு - றெக்கி பார்த்து, தாக்குதல் திட்டம் வகுத்து, தாக்குதல் குழுக்களை ஒழுங்குபடுத்தி, ஆயுதங்களோடு படகுகளைத் தயார்செய்து, தானே கொமாண்டராகி வியூகம் அமைத்து நின்று - அந்தக் கடற்சண்டையை வழிநடாத்தினான் சாள்ஸ்.

கனன் பீரங்கிகள், பிப்ரிகலிபருக்கும் மிகையான கனரகத் துப்பாக்கிகளுடன், அதிவேக ஓட்டம்கொண்ட நேவியின் சண்டைப் படகுகளை - பிப்ரி, ஜி. பி. எம், ஜியுடன், சாதாரண ரைபிள்களை மட்டுமே கொண்ட எங்களது மீன்பிடிப் படகுகள் துரத்தித் தாக்கின.

சிங்களக் கடற்படையைப் புலிகளின் படகுகள் கலைத்து விரட்டிய முதல் வரலாறு அது.

எதிரியின் போர்ப்படகொன்று மூழ்கடிக்கப்பட்டதுடன், எல். எம். ஜி. ஒன்றும் கைப்பற்றப்பட்டபோதும் - இழப்பேதுமில்லை எங்களுக்கு.

இதற்கு முன்னர், நெடுந்தீவுக்கும் குறிகாட்டுவானிற்கும் இடையிலுள்ள கடலில் சாள்ஸ் நடத்திய ஒரு கண்ணிவெடித் தாக்குதல் குறிப்பிடத்தக்கது.

இரவு முழுவதும் ஆழக்கடலுக்குள் இறங்கி நின்று, அலைகளின் நடுவில் அவன் கண்ணிவெடியை விதைத்துவிட்டுவர -

மறுநாள் காலை - அதில் சிக்கிய எதிரியின் படகொன்றை அலைகள் விழுங்கிக் கொண்டன என்பதுடன், சிங்களக் கடற்படையின் வடபிராந்தியத் தளபதி கொமடோர் அமரவீர படுகாயமடைந்தார் என்பதும் 7 படையினர் கொல்லப்பட்டதும் முக்கியமானது. உடைந்த படகையும், ஆயுதங்களையும் கடலுக்கடியில் இருந்து மீட்டபின்னர்தான், சாள்ஸ் அடுத்த வேலைக்குப் போனான்.

1992 இன் துவக்கத்தில் - தாளையடிக் கடலில், எதிரியின் 'சவட்டன்' விசைப்படகு மீது தானே கொமாண்டராக நின்று ஒருபகற்பொழுதுத் தாக்குதலை நடாத்தினான், சாள்ஸ். எங்களது நான்கு வீரர்களை நாம் இழந்ததுடன், அவனுக்கும் காலில் காயம் ஏற்பட்ட அந்தச் சண்டை -

ஆனையிறவுக் கடல்நீரேரியில் எதிரியின் நீருந்து விசைப்படகொன்றை மூழ்கடித்து - பிப்ரி உட்பட - ஆயுதங்களையும் கைப்பற்றிய கடற்கண்ணித் தாக்குதல் -

அதே நீரேரியில் எதிரியின் ரோந்துப் படகுத் தொடரைத் தாக்கி, பல ஆயுதங்களைக் கைப்பற்றிய இன்னொரு சண்டை -

மாதகல் கடற் பிரதேசத்தில், விசைப்படகொன்றை மூழ்கடித்த மற்றொரு கண்ணிவெடித் தாக்குதல் -

பூநகரி கல்முனைக்கருகே உள்ள மான்தீவில், சிங்களப் படையின் கரையோரக் காவலரணைத் தகர்த்து, றைபிள்களோடு எதிரியின் சடலங்களையும் எடுத்துவந்த அதிரடித் தாக்குதல் -

இவ்வாறாக - கடற்புலிகளின் கடற் சண்டைத்திறன் வளர்ந்த ஒவ்வொரு தாக்குதலுக்குப் பின்னாலும் இருந்த உந்துவிசை அவன்.


அவனிடம் ஒப்படைக்கப்படுவது என்ன வேலையாகத்தான் இருந்தாலும், அந்த வேலையோடு தன்னையே கலந்து செய்துமுடிக்கும் தன்மை அவனுடையது.

களைப்பில்லாத, சலிப்பில்லாத, ஊக்கம் நிறைந்த, உற்சாகமான மனது அவனுடையது.

வெற்றிகரமான கடற் சண்டைகளின் முன்னோடித் தளபதி மட்டுமல்ல, அவனொரு சிறந்த தொழில்நுட்பவியலாளனுமாவான்.

வேலையில்லாத வேளையில்லாதவன் அவன். ஓய்வுக்கு ஓய்வு கொடுத்திருந்த அந்த உழைப்பாளி, ஓய்வு நேரங்களில் மூளைக்கு வேலை கொடுத்து எதையாவது ஆய்வு செய்துகொண்டிருப்பான்.

கைவசம் உள்ள வளங்களைக்கொண்டு புதிது புதிதாக எதையாவது கண்டுபிடிக்கவேண்டுமென்றோ, அல்லது கஷ்டப்பட்டு சிரமத்துடன் நாம் செய்கின்ற வேலைகளை இலகுவாகவும் வேகமாகவும் செய்துமுடிக்கக்கூடிய வழிகளைப் பற்றியோ, அல்லது இப்படியான ஏதோ ஒரு விடயத்தைப்பற்றியோதான், அவனது 'ரெக்னிக்கல் மூளை' எப்போதும் சிந்தித்துக் கொண்டிருக்கும்.



லெப். கேணல் சாள்ஸ்

''முயற்சிசெய்து பார்த்துவிட்டோ அல்லது முயற்சி செய்து பாராமலேயோ ஏதோ ஒரு சாட்டுச் சொல்லிக்கொண்டு, 'இது சாத்தியப்படாது' என்று நாங்கள் ஒதுக்கி வைத்துவிடுகின்ற வேலைகளை - தானாகவே பொறுப்பெடுத்து, வெற்றிகரமாகச் செய்து முடித்துவிடுவான் அந்தப் பொறியியலாளன்'' என்றான், ஒரு கடற்புலித் தோழன்.

கடற்புலிகளின் தொழில்நுட்ப வளர்ச்சியும் சாள்சின் அறிவாற்றலும் ஒன்றோடொன்று இறுகப் பிணைக்கப்பட்டிருந்தன.

வோக்கி கதைக்க 'குறொஸ்' செய்யவேண்டுமென்றாலும் சரி, 'கொம்யூனிக்கேசன் செற்'றுக்கு தேவையான உதிரிப்பாகம் என்றாலும் சரி, என்னவாகத்தான் இருந்தாலும் - 'அது வேண்டும் இது வேண்டும்' என்று எதிர்பார்க்காமல், உள்ளூரில் கிடைக்கக்கூடியவற்றைக் கொண்டே செய்து முடித்துவிடுவதுதான், மற்றையதொழில்நுட்பவியலாளர்களுக்கும் அவனுக்கும் இடையிலுள்ள வேறுபாடு.

கடற்புலி வீரர்களுக்கான படகுப் பயிற்சிக் கல்லூரி ஒன்றை ஆரம்பித்தான், அந்தச் சிறந்த படகோட்டுனன். புயலுக்கும் சூறாவளிக்கும் இடையில், ஆர்ப்பரித்தெழும் கடல் அலைகளுக்கு நடுவில் - படகை மிக நீண்ட தூரத்திற்குச் செலுத்தக்கூடியதான பயிற்சியை அளித்து, பெண்புலிகள் உட்பட திறமையான ஓட்டிகளை சாள்ஸ் உருவாக்கித் தந்தான். இப்போது அவன் இல்லை; ஆனால், அந்தப் பட்டறை இனி எப்போதும் புதியவர்களைத் தயார் செய்துகொண்டே இருக்கும் - அவனது நினைவோடு.

சண்டை முனைகளில் நிலவும் போர்ச் சூழ்நிலைகளினால் தடங்கல்கள் ஏற்பட்டு, எமக்கு உணவு வராமல் விட்டுவிடுவது அடிக்கடி நடக்கும் ஒரு விடயம். ஆனால், சாள்சுடன் நின்று களங்களில் சமரிட்ட தோழர்கள் சாப்பாட்டுக்காக காவல் இருந்த நாட்கள் குறைவு. உடனடியாகவே அடுப்பில் சட்டியையோ வாளியையோ வைத்து, எட்டியவற்றைக்கொண்டு சுவையாகக் கறி சமைத்துத் தோழர்களுக்குக் கொடுத்துவிடுவான், அந்த அட்டகாசமான சமையல்காரன். அவன் தயாரிக்கும் கோழி சூப் இயக்கத்தில் பிரபலமானது. தலைவரிடமே பாராட்டுப் பெற்றது. சாள்சின் சூப் பருகவென்று நண்பர்கள் தேடிவந்த நாட்கள்கூட உண்டு. எம்மைப் பிரிவதற்கு சில நாட்களுக்கு முன்கூட - மூர்த்தி மாஸ்ரர் வீட்டில் கோழி சூப் விருந்து படைத்துவிட்டுத்தான் அவன் போனான். அவன் ஆக்கித் தந்த சுவைகள் அவனது நினைவைத் தந்துகொண்டே இருக்கின்றன-

தோழர்களில் அவன் கொண்டிருந்த அன்பும் பாசமும் அலாதியானது. மற்றெல்லோரையும்விட வித்தியாசமான விதத்தில் பழகுகின்ற இவன் - எல்லாப் போராளிகளாலும் கவரப்பட்டு அவர்களின் நெஞ்சங்களில் நீக்கமற நிலைதுவிட்ட ஓர் உற்ற நண்பன்.

கிளாலியிலிருந்து வேலையாக வந்து எங்காவது நிற்கும்போது கோவில் திருவிழா பார்க்க நண்பன் அழைத்தால், ''பொடியளை விட்டிட்டு வந்திட்டன்: நான் வரேல்லை'' என்று போக மறுக்கும் சாள்ஸ், என்ன நிகழ்ச்சி பார்ப்பதற்கென்றாலும் - அது சரியோ தவறோ - தன்னோடு நிற்கும் போராளிகள் எல்லோரையும் அழைத்துச் செல்லாமல் ஒரு நாள்கூட போயிருக்காத உயிர்த் தோழன்.

''எந்த மாவட்டத்திற்குப் போனாலும், அங்கு நிற்கும் யாராவது ஒரு போராளி வந்து, 'சாள்ஸ் அண்ணையிட்ட சுகம் கேட்டதென்று சொல்லுங்கோ' என்பான்'' என்று சொன்னார் பிருந்தன். அந்தளவுக்கு வியாபித்திருந்தது அவன் நட்பு.

தவறிழைக்கும் போராளிகளைத் தண்டிக்கும் போது - அரவணைத்து, அன்பாகப் பேசி பிழைகளைத் தெளிவுபடுத்தும் விதம், அவனில் வேறுபட்ட ஒன்றாகவே கண்டோம்.

வகுப்பு எடுக்கும்பொழுது - பகடியாகவும் செல்லமாகவும் கதைத்து, தான் சொல்வதை அவர்கள் மனவிருப்போடு கேட்டுப் படிக்கக்கூடியதாக விளங்கப்படுத்திக் கற்பிப்பது, அவனுடைய பாணி. தனக்குத் தெரிந்த எல்லாவற்றையும் மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுத்துவிடும் தன்மை அவனுடையது. கடலிலும், தரையிலும் தான் பெற்ற அனுபவங்கள், பட்ட துயரங்கள், திறமையான செயற்பாடுகள் என எல்லாவற்றையும் சொல்லிக்கொடுப்பான். '' புத்தகத்தில படித்த அறிவு இல்லாவிட்டாலும் பரவாயில்லை; அனுபவம் மூலம் படிக்க நிறைய இருக்கு. அனுபவம் பலதரப்பட்ட பாடங்களையும் எங்களுக்குக் கற்பிக்கின்ற ஒரு வழிகாட்டி'' என்று சொல்லி, தான் வளர்ந்ததைப் போலவே - பட்டறிவுமூலம் - போராளிகளை வளர்க்கும் வழிமுறை அவனுடையது.

ஒவ்வொரு கடற்சண்டையின் முடிவிலும், அந்தக் கள நிகழ்ச்சிகளின் போக்குகளை ஆழமாக நோக்கி, சரி பிழைகளை ஆராய்ந்து, அந்தப் பட்டறிவுகளின் அடிப்படையில்

**சாள்ஸ்! நீ சுமந்த இலட்சியத்தை அடையும் வரை ஓயமாட்டோம்;**
**உன்னைப்போலவும் - கடலின் அலையைப்போலவும்!**

அடுத்த சண்டையை நெறிப்படுத்துகின்ற அவன், ஓர் அனுபவசாலியான படைத் தளபதி. எப்போதும், தானே நேரடியாகக் கடலில் இறங்கி, சண்டைகளை வழிநடாத்தி, வீரர்களுக்குச் சொல்லிக்கொடுப்பது அவனுடைய பாணி. சிரிப்பூட்டும் பகடிகளாலும், பம்பல்களாலும் எங்களை இன்பத்திலாழ்த்தும் அவனுடைய கதைகள், ஒரு தனித்துவமான கலாரசனை. எப்போதும் கலகலப்பாக - மகிழ்ச்சியாக - பொழுதுகள் அவனோடு கழியும்.

போராட்டத்தைப்பற்றியும், இயக்கத்தைப் பற்றியும், தலைவரைப்பற்றியும் சொல்லிச் சொல்லி எப்போதும் எங்களை உற்சாகத்தோடு வைத்திருப்பான் சாள்ஸ்.



என்றுமே மறக்கமுடியாத பசுமையான நினைவுகள் அவனுடையவை. இன்று எங்களோடு அவன் இல்லை - ஆனால், எல்லோருக்குள்ளும் அவன் நிறைந்திருக்கின்றான்.

சமர்முனைகளில் சண்டைகளை வழிநடாத்திக்கொண்டிருக்கும் அந்தத் தளபதி, மக்களை எங்களோடு இணைப்பதற்கு ஆற்றவேண்டிய பணிகளைப்பற்றியும் சிந்திப்பான். ஒவ்வொரு தாக்குதலையும் தனியே இராணுவ வெற்றியாக மட்டும் வைத்துக்கொண்டிராமல் - மக்களைத்தாயகப்பணிக்குள் உள்வாங்கும் அரசியல் நோக்கங்களை நிறைவேற்றவும் அவ்வெற்றிகளைப் பயன்படுத்தினான். ஆனையிறவு கடல் நீரேரியில் கண்ணிவெடியில் உடைந்து பயனற்ற விதத்தில் கடலுக்குள் மூழ்கிய நீருந்து விசைப் படகைக்கூட - இரவிரவாகச் சுழியோடி கட்டி இழுத்து வந்து, வடமராட்சியில் மக்கள் பார்வைக்கு வைத்ததும் -

ஊர்காவற்துறைக் கடலில் சேதப்பட்ட நேவிப்படகையும், எடுத்த எல்.எம்.ஜியையும் யாழ்ப்பாணக் கரையில் சனத்துக்குக் காட்டியதும் - அவனது அரசியல் சிந்தனைக்குச் சான்றுகள். புலிகளின் வெற்றிக்களிப்புகளை மக்களோடு பகிர்ந்துகொண்டான் அந்தக் கடற் தளபதி.

ஆனையிறவுக் கடல்நீரேரியில் சாள்ஸ் நடத்திய ஒரு தாக்குதல், மேனி சிலிர்க்கவைக்கும் கதை.

மதியத்திற்குப் பிந்திய பகற்பொழுது அது. எட்டு விசைப்படகுகளில் கடல் ரோந்து வந்துகொண்டிருந்த சிங்களக் கடற்படையின் நீருந்து விசைப்படகு ஒன்று, ஏற்கெனவே சாள்ஸ் வைத்துவிட்டுக் காத்துக்கொண்டிருந்த கண்ணிவெடியில் சிதறி மூழ்கியது.

திகைத்துப்போன நேவியின் ஏழு படகுகளும் அவ்விடத்தைச் சூழ்ந்துவிட - படகையும் ஆயுதங்களையும் தங்கள் ஆட்களையும் மீட்க அவர்கள் முயன்றுகொண்டிருந்தனர். பூநகரிப் பக்கமிருந்து அவசரமாக வந்த 'ஹெலி' வட்டமிட்டபடி பாதுகாப்பு வழங்கிக்கொண்டிருந்தது.

சாள்சுக்கு ஏமாற்றம். படகையும் ஆயுதங்களையும் மீட்க முன்னர், அவர்களைத் தாக்கி விரட்டத் தயாரானான் அவன். கைவசமிருந்தது ஒரே ஒரு படகு; அதிலிருந்ததும் ஒரே ஒரு கனரகத்துப்பாக்கிதான். அவர்களோ ஏழு சண்டைப்படகுகளில்; ஹெலி வேறு மேலே. சமாளிக்க முடியுமா என கூடிநின்றவர்கள் சிந்திக்க, இன்னும் சில புலிகளுடன் படகைக் கடலில் இறக்கினான் அந்த வீரன்.

கரையிலிருந்து பார்த்துக்கொண்டிருந்த பிருந்தன் சொன்னார் -

''ஜி.பி.எம்.ஜி ரவைகளைப் பொழிய மின்னலெனத் தங்களை நெருங்கிய தனித்த ஒரு படகைக் கண்ட நேவி அதிர்ந்து போனான். அவிழ்த்துவிட்ட பட்டி மாடுகள் வரிசையாக ஓடுவது போல, நேவிப்படகுகள் ஏழும் ஓட்டமெடுக்க, மேலே நின்று சுட்டுக் கொண்டிருந்த ஹெலியாலும் சாள்சைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.''

அன்று கடலுக்குள்ளிருந்து படகையும் ஆயுதங்களையும் மீட்டுத்தான், சாள்ஸ் வடமராட்சியில் மக்கள் பார்வைக்கு வைத்தான்.

திருக்கோணமலையின் கடற்கரையோரமுள்ளது திருக்கடலூர் - அந்த வீரனைப் பெற்றுத்தந்த பெருமை அதற்குத்தான் சேரும். 1960 இன் கடைசி மாதத்தின் 15 ஆம் நாள், ஒரு அழுகுரலுடன் அது நடந்தது.

அப்பா ஆனந்தராசாவுக்கும், அம்மா விஜயதேவிக்கும் மகனாக - 2 அக்காமாருக்கும் 4 தம்பிமாருக்கும் இடையில் பிறந்தவனுக்கு, அவர்கள் ஆசையோடு வைத்த பெயர் தவராஜன்.

கடற்றொழில் அந்தக் குடும்பத்திற்கு மட்டுமல்ல, அந்தக் கிராமத்திற்கும் சொந்தமானது.

புனித ஜோசேப் கல்லூரியில் 10 ஆம் வகுப்புவரை படித்துவிட்டு, அப்பாவோடு தொழிலுக்குப் போனவன், சின்ன வயதிலேயே திறமைமிக்க படகோட்டியாகத் தேர்ச்சி பெற்றான். மட்டக்களப்பு தொழில்நுட்பக் கல்லூரியில் அவன் பாடத்திட்டம் ஒன்றைப் பூர்த்தி செய்வதற்கு, இயற்கையாகவே அவனிடமிருந்த 'ரெக்னிக்கல் மூளை' துணையாக இருந்தது. தடங்கலின்றி சிங்களத்தில் உரையாடுவதோடு, ஆங்கிலத்தில் பேசும் ஆற்றலையும் சாள்ஸ் கொண்டிருந்தான்.

சிங்கள இனவாதப் புயல் எங்கள் தாய் நிலத்தில் கோரமாக வீசியபோது, எல்லோரையும் போலவே இந்தக் குடும்பத்தின் அமைதியான வாழ்வும் குலைந்தது.

பச்சைப் பேய்களின் பவனி: இராணுவ வண்டிகளின் வலம்: சிங்களக் காடையர்களின் அட்டூழியம்: திருக்கோணமலை எரிந்தது: தமிழர்கள் பிணங்களாய் குவிந்தார்கள்:எங்கள் கடலில் அவர்கள்: விடிகாலையில் கரையொதுங்கும் பிணங்கள் - அந்த எரிமலை தனக்குள் குமுறும்.

எல்லாவற்றுக்கும் மேலாக அன்புத் தம்பி ஜெயராஜனை சிங்களத் துப்பாக்கிகள் குரூரமாகக் கொன்றபோது, அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

தாயகத்திற்குச் செய்யவேண்டிய பணி: சொந்த வாழ்வையும் தாக்கிய பேரினவாதம்; அவன் இயக்கத்திற்குப் போக முடிவெடுத்தான்.

புலிகள் இயக்கத்தின் தொடர்பு தேடி சந்து பொந்தெல்லாம் அலைந்து திரிந்தவனுக்கு, நீண்ட காலத்தின் பின் - 1985 இன் நடுப்பகுதியில் - அது கிடைத்தது. சந்தோஷம் மாஸ்ரரைத் தேடிப் பிடித்து இயக்கத்தில் சேர்ந்தவன், திருமலையில் இரண்டாவது பயிற்சி முகாமில் பயிற்சி எடுக்கும்போதே புலேந்தி அம்மானின் கவனத்தை ஈர்க்குமளவிற்கு ஆற்றலை வெளிப்படுத்தி, திறம்படச் செயற்பட்டான்.

திருமலைக்கான கடல்மார்க்க விநியோகங்களைச் செய்வதே அவனுக்குக் கொடுக்கப்பட்டிருந்த வேலை. ஆனால், மிகச் சிரமமான அந்தப் பணியில் வண்டி ஓடிவிட்டுக் களைப்போடு வந்தாலும், ஆமிக்குச் சக்கை அடிக்க சுரேந்திரன் வெளிக்கிட்டால் தானும் சேர்ந்து போவான்.

இப்படிப் போகத் தொடங்கியவன்தான், பின்பு கண்ணிவெடி வைக்கப் போகின்றவர்கள் ஆலோசனை பெற்றுச் செல்லும் அளவுக்குச், 'சக்கையில எக்ஸ்பேட்' ஆகினான்.

திருக்கோணமலையில் சிங்களப்படை தனது முற்றுகையை இறுக்கிய ஒரு காலகட்டத்தை நினைவுகூர்ந்தார் பதுமன்.

அது இக்கட்டான சூழ்நிலை; உணவுக்கே பஞ்சமான நெருக்கடி. விநியோக வழிகள் எல்லாமே தடைப்பட்டுவிட்ட அந்த நாட்களில் புலிகளின் உணவுக் கால்வாயாக இருந்தவன் சாள்ஸ்தான். நிலமெல்லாம் ஆமி, கடலெல்லாம் நேவி. சாள்ஸ் படகெடுத்துப் போவான். அடிக்கடி கடலில் நேவி கலைப்பான். ஆனாலும் உணவோடு வந்து சாள்சின் வண்டி கரையைத் தொடும். "இன்று வண்டி ஓட முடியாது; கடலில் நேவி கூடுதலாக நிற்கிறான்'' என்று வோக்கி அறிவிக்கும். அப்போதும் தோழர்களுக்கு உணவு தர வண்டியோடு கடலில் இறங்குவான், இந்த உயிர்த் தோழன்.

ஒருநாள் - சிங்களப்படையின் முற்றுகையொன்று; காயப்பட்ட புலிவீரர்களைக் காவிக்கொண்டு அவனது படகு புறப்படும்போது அமைதியாக இருந்த கும்புறுப்பிட்டிக் கடல், திடீரென வழமைக்கு மாறாய் மாறியது. கொந்தளித்த கடல் வண்டியைக் கவிழ்க்க. அலைகளுள் தவித்து, புண்ணுக்குள் பட்ட உப்புத் தண்ணீரால் துடித்த தோழர்களைப் பாதுகாப்பாக அவன் கரைக்குக் கொண்டுவந்து சேர்த்தது, கண்ணுக்குள் நிற்கிறது.

86 இன் இறுதி. சுற்றிவளைப்பொன்றில் காயமடைந்து யாழ்ப்பாணம் வந்தபின், தமிழகத்திற்கு வண்டி ஓட்டுவது அவனுக்கு ஒப்படைக்கப்பட்ட வேலை. அந்தப் பணியின்போது அவன் நேவியிடம் கலைபடுவது மூன்றுநேர உணவைப்போல நிகழும் சம்பவம். அப்படியான ஒரு நாளில் -

முன்னிரவு நேரம், பொருட்களோடும் போராளிகளோடும் வந்துகொண்டிருந்தது சாள்சின் படகு. திடீரென எதிர்ப்பட்ட நேவிப்படகு கலைத்துக் கலைத்துத் தாக்க, இயலுமானவரை வேகத்தைக்கூட்டி சாள்ஸ் ஓட முயல, பீரங்கிக் குண்டுபட்டு வெடித்துச்சிதறிய படகிலிருந்து அவன் தூக்கி வீசப்பட்டான். முகம்மது மாத்திரம் கண்ணுக்குத் தெரிந்தான்.

கரையை நோக்கி நீந்தத் தொடங்கினார்கள். மைல்கணக்கான தூரம் நேரம் செல்லச் செல்ல களைத்துப்போய் பின்தங்கிய முகம்மது, கண்ணுக்கு முன்னாலேயே அலைகளுக்குள் காணாமல் போய்விட்டான்.

எல்லாம் போய்விட்டது; தோழர்களை இழந்த துயர்; நடுச்சமுத்திரம்; உள்ளிழுக்கும் கடல்; தனித்த ஒருவன்; தளராத உறுதி. 17 மணிநேரம் நீந்தி, மறுநாள் மாலை வடமராட்சிக் கரையில் ஒதுங்கும்வரை, மயக்கம் தன்னை ஆட்கொள்ள அனுமதிக்காதிருந்தான் அந்த வேங்கை என்பதை, மற்றவர்கள் கற்பனை செய்துகூடப் பார்க்கமுடியாது. அது அவனது மன வைராக்கியத்துக்குச் சான்று.

அந்த நினைவுகளெல்லாம் 'நாங்களும் ஒரு நாளைக்கு நேவிப்படகுகளைக் கலைத்து அடிக்க வேண்டும்' என்ற வேட்கையை, அந்த வீரனுக்குள் வளர்த்துக்கொண்டிருந்திருக்கும்.

இந்தியப்படையின் ஆக்கிரமிப்புக் காலம். இப்போது அவனது பணி, மணலாற்றில் தலைவரின் நிழலில் - போர் மையம் கொண்டிருந்த முனையில் - மிகமிக இன்றியமையாத கடல்வழி விநியோகம்தான் இங்கும் அவனது வேலை. வண்டி ஓடிவிட்டு வந்து நிற்கும்போது, களைப்போடு எங்காவது படுத்திருப்பான் என்று தேடினால், போராளிகளுக்குப் பாடம் சொல்லிக்கொண்டிருப்பான் அல்லது 'கொம்யூனிக்கேசன் செற்' றில் ஏதாவது செய்துகொண்டிருப்பான். எதுவுமே இல்லாவிட்டால், சமையற்கட்டில் கறிக்கு உப்புப்புளி சரிபார்த்துக்கொண்டாவது இருப்பான்.

இந்தியர்கள் வெளியேற்றப்பட்டபின் - சசிக்குமாரோடும் பிருந்தனோடும், யாழ்ப்பாணத்திலிருந்த பயிற்சி முகாம்களில் புதிய போராளிகளுக்கு துறை சார்ந்த வகுப்புக்கள் எடுத்துக்கொண்டு இருந்த சாள்ஸ் - சிங்களப்படையுடன் மீண்டும் போர் தொடங்கிய பின், கடற்புலிகள் பிரிவோடு இணைக்கப்பட்டான்.

சாள்சின் எல்லாத் திறமைகளும் அனைத்து அம்சங்களும் முழுமையாக வெளிப்பட்ட காலம் அது.

'விடுதலைப் புலிகளின் கடற்புலிகள்' புதிய பரிமாணம் பெற்றபோது, தளபதி சூசையின் உற்ற தோழனாக நின்று, கடற்புலிகளின் வளர்ச்சிக்காக ஓய்வில்லாமல் அவன் உழைத்தான்.

சாள்ஸ் ஒரு கடற்காவியம்!

(11 ஆம் பக்கம் பார்க்க)

## அன்றும் இன்றும்

''காட்டுக்கு வாறியா, வேட்டையாட?''

''ஓ...! ஓ—''

''கள்ளன் வந்தா பயப்படக் கூடாது என்ன?''

''ஓ...! ஓ—''

கேட்ட பிள்ளை மற்றக் குழந்தையின், கண்ணுக்குள் ஊதி விடுகிறது! சரி சொன்ன பிள்ளை உடன் கண்ணை மூடித் திறக்கிறது.

''பார்த்தீரோ, பயந்திட்டீர்!'' அது தன் வெற்றியைக் கைகொட்டிக் காட்டுகிறது! இது பழைய விளையாட்டு!

இன்று –

இரண்டு குழந்தைகள் விளையாடுகின்றன. ஒருவன் ஓடிப்போய் உள்ளே குசினியில் எரிந்து கொண்டிருந்த சிறு விறகைக் கொண்டு வருகிறான்.

அதனை ஒரு கல்லின்மேல் வைக்கிறான். மற்றவனின் கையில் கூரையின் உடைந்த சில ''சீற்'' துண்டுகள் தெரிகின்றன. அவற்றை அந்த விறகிருந்த கல்லின்மேல் ''டோம்'' என்ற சத்தத்துடன் அடிக்கின்றனர்! பலத்த சத்தம். விறகு, புகை கிளப்புகிறது; சுற்றிலும் ஓடுகள் சிதறிக் கிடக்கின்றன!

''என்ன பிள்ளைகள் இது?'' எனத் தாத்தா அசைந்து வந்து கேட்கிறார்.

''ஷெல் விளையாட்டு!''

இரு பிள்ளைகளும் கைகொட்டிக் குதிக்கின்றன! தாத்தா வியப்புடன் புன்னகை பூக்கிறார்!

(உண்மை நிகழ்விலிருந்து)

# மூன்றாண்டுப் போர்: வெற்றி யார் பக்கம்?

சிங்களப் பேரினவாதத்தின் நான்கு ஜெனரல்கள், இரண்டு அட்மிரல்கள், இரண்டு அரசியல் தலைவர்கள் உட்பட சுமார் 5000 படையினரையும் இந்த மூன்று வருடப்போரில் சிறீலங்கா அரசு இழந்துவிட்டது.

றஞ்சன் விஜேவர்த்தனா (பாதுகாப்பமைச்சர்), லக்கி விஜேவர்த்தனா (திருமலைத் தளபதி), டென்சில் கொப்பேகடுவ, விஜய விமலரட்னா ஆகிய ஜெனரல்களும்; கிளான்சி பெர்னாண்டோ, ஜெயமகா ஆகிய அட்மிரல்களும்; பிரேமதாசா, லலித் அத்துலத்முதலி ஆகிய அரசியல் தலைவர்களுமே அவர்களாவர்.

அதேவேளை, இந்த மூன்று வருடப் போரில் 8500 இற்கும் அதிகமான படையினர் படுகாயமடைந்திருந்தனர். இவர்களில் பெரும்பாலானோர் மீண்டும் போர்க்களம் செலலமுடியாதவாறு அங்கவீனமோ அல்லது உடல்-உள பாதிப்புக்களாலோ சண்டைக்களங்களிலிருந்து நிரந்தரமாக அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் பயத்தின் காரணமாக 8000பேர் படையை விட்டோடியுள்ளனர் (இத்தகவல்களெல்லாம் கொழும்புப் பத்திரிகைகள் பிரசுரித்தவை)

இவை எல்லாவற்றையும் ஒன்று திரட்டிப் பார்க்கும்போது, இந்த மூன்று வருடத்தில் 18000 ஆட்களை சிங்களப் படை இழந்துவிட்டது.

இது சிங்கள தேசத்தின் மொத்த படைபலத்தில் ஐந்தில் ஒரு பகுதி என்பது குறிப்பிடத்தக்கது. அதாவது, இந்த மூன்று வருடப் போரில் அரச படை தனது மொத்தப் படை பலத்தில் - ஆள், ஆயுதம் உட்பட - இருபது வீதத்தை இழந்துவிட்டது.

இந்த இழப்பு விகிதம் சாதாரணமானதல்ல. இது ஒரு படையின் பேரிழப்பை அல்லது தோல்வியை நோக்கிய சரிவைச் சுட்டிக்காட்டுகின்றது. இன்னும் சொல்லப்போனால் வரலாற்றில் என்றுமில்லாதவாறு, இந்த மூன்றாண்டுப் போரில், சிங்களப் பேரினவாதம் சக்திமிக்க தனது இராணுவத் தலைமையையும் அரசியல் தலைமையையும் ஏக காலத்தில் இழந்து, பெரும் நெருக்கடிகளையும் சவால்களையும் எதிர்நோக்கியுள்ளது.

1990 யூன் 10 ஆம் திகதி ஆரம்பமான ஈழப்போர் இரண்டை, சிங்கள அரசு ஒரு திண்ணியமான திட்டத்துடனேயே தொடங்கியது. பூரண பொருளாதாரத் தடையுடன் ஓய்வற்ற தொடர் யுத்தத்தின்மூலம் புலிகளை வென்று, விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதே அத்திட்டம். இதற்காகப் பெருந்தொகையில் பணத்தைச் செலவிட்டு தனது படைபலத்தைப் பாரிய அளவில் வளர்த்தெடுத்தது.

புதிய புதிய ஆயுத தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்கென்றும் படை ஆட்களை அதிகரிக்கவும் அவர்களுக்குரிய சம்பளம், கொடுபபனவுகள், நஷ்டஈடுகள் .... என்றும் போரிற்கென பணம் வாரி இறைக்கப்பட்டது. அத்துடன், படையினரிடமிருந்து புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களை ஈடுசெய்வதற்காக மீண்டும் நடந்த ஆயுதக்கொள்வனவுகளும் போர்ச் செலவை அதிகரிக்கச் செய்துள்ளன.

இதனால் சிறீலங்காப் பொருளாதாரம் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்தது. ஆரம்பத்தில் வெளிநாட்டு உதவிகளுடன் இந்தப் பொருளாதார நெருக்கடியை அரசு சமாளிக்க முயன்றது. ஆனால் தற்போது அந்த வெளிநாட்டு உதவிகளுக்கும் அப்பால் சாதாரண சிங்கள மக்களது தலையிலும் போர்ச் செலவைச் சுமத்தவேண்டிய நிர்ப்பந்தம் சிறீலங்கா அரசுக்கு வந்துவிட்டது. போர்ச் செலவை ஈடு செய்வதற்காக அரச ஊழியர்களது சம்பள அதிகரிப்புகள் நிறுத்தப்பட்டுள்ளன; சமூகநலத் திட்டங்கள் கைவிடப்பட்டுள்ளன; அத்தியாவசியப் பொருட்கள் மீதான மானியங்கள் நீக்கப்பட்டுள்ளன.

இதனால் சிங்கள மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரிக்கத் தொடங்கியுள்ளது மூன்றாண்டுப் போரால் எழுந்த இந்தப் பக்க விளைவு சிங்கள தேசத்தின் அரசியலில் மாற்றத்தைக் கொண்டு வருமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

இந்த மூன்றாண்டுப் போரின் முதலாண்டில் (90-91).1000 கோடி ரூபாவை போருக்காக சிங்கள அரசு செலவிட்டது.

இரண்டாம்ஆண்டில் (91-92) 1500 கோடி ரூபாவைச் செலவிட்டது. மூன்றாம் ஆண்டில் (92-93) 1800 கோடி ரூபாவுக்கும் மேலான தொகையைச் செலவளித்துவிட்டது. அதாவது போர்ச்செலவாக சிறீலங்கா அரசு இப்போது நாளொன்றுக்கு 5 கோடி ரூபாவைச் செலவிடுகின்றது. அதேவேளை அரசின் வருமானம் குறைந்துவருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. தேயிலை ஏற்றுமதியில் வீழ்ச்சியும். உல்லாசப் பயணத்துறையில் வளர்ச்சியின்மையும் அரசின் வருமானத்தைப் பாதித்த முக்கிய விடயங்கள் எனச் செய்திகள் கூறுகின்றன.

அரசின் வருமானம் அதிகரிக்காத நிலையிலும் வருடாவருடம் போருக்கென அரசு செலவிட்ட பணம் அதிகரித்தது.

ஆனாலும், புலிகள் இயக்கத்துடனான போரை அரச படைகள் வென்றனவா? அல்லது புலிகள் இயக்கத்தைப் பலவீனப்படுத்தியதா? அல்லது தமிழ் மக்களைத் தானும் மண்டியிடச் செய்ததா?

''இல்லை'' என்பதுதான் இவ்வினாக்களுக்கு விடை. அப்படியாயின் இந்த மூன்று வருடப் போரில் சிறீலங்கா அரசு எதைச் சாதித்தது?

அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவித்து, அவர்களைச்சகல வழிகளிலும் துயர வாழ்வு வாழும்படி நிர்ப்பந்தித்ததைத் தவிர, அரசு எதையும் சாதிக்கவில்லை.

இதேவேளை, சிங்களப்படையின் மூன்றாண்டுச் சாதனையாக- கிழக்கைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துவிட்டதாகவும், குடாநாடு மீது ஒரு பூரண இராணுவ முற்றுகையை இட்டுப் புலிகளைப் பலவீனப்படுத்திவிட்டதாகவும், தொடர்ச்சியான பொருளாதாரத் தடையால் பொதுமக்களுக்கும் புலிகள் இயக்கத்துக்கும் இடையில் ஒரு இடைவெளியை ஏற்படுத்திவிட்டதாகவும் - கொழும்புப் பத்திரிகைகளும் சில இராணுவ அதிகாரிகளும் கூறிவருகின்றனர்.

சிங்களத் தரப்பிலிருந்து கூறப்படுவதைப்போல கிழக்கில் சிங்களப்படைகள் போர்க்களத்தில் வெற்றிபெறவில்லை; தமிழர் இனக்கொலையிலேயே வெற்றிபெற்றிருக்கின்றன. அப்பாவி மக்களைப் படுகொலை செய்து, அவர்களின் வீடுகளை - வயல்களை எரித்து அகதிகளாக விரட்டி, அவர்களின் நிலங்களைஅபகரித்து. ஒரு தமிழர் இனப் படுகொலையைச் செய்துகொண்டிருக்கின்றன. இந்தத் தமிழினப் படுகொலைக்கு சிங்கள - முஸ்லிம் ஊர்காவற் படையினரும் காடையரும் மற்றும் துரோகக் கும்பல்களும் அனுசரணையாக இருந்து வருகின்றனர்.

இதேவேளை, பெரும் எண்ணிக்கையிலான படையினரைப் பயன்படுத்தி, பாரிய பொருட் செலவில் சிங்கள அரசு செய்த குடாநாட்டு முற்றுகையின் நோக்கம் என்ன? தமிழ் மக்களை வருத்தி அவர்களது உறுதியை - விடுதலை வேட்கையை உடைப்பது; புலிகள் இயக்கத்தின் போர் ஆற்றலைக் குறைப்பது;இறுதியில் குடாநாட்டைப் பூரணமாக ஆக்கிரமிக்கும் எண்ணம் தான். ஆனால் அரச படைகள் அதைச் சாதித்தனவா?

உணவுப் பஞ்சம், மருந்துப் பற்றாக்குறை, போக்குவரத்துப் பிரச்சினை, தொடர்ச்சியான இராணுவ நடவடிக்கைகள் - விமானத் தாக்குதல்கள் - எறிகணைத் தாக்குதல்கள் என்பவற்றுக்கு மத்தியிலும் மக்கள் நிமிர்ந்தே நிற்கின்றனர். மக்களின் உறுதியை அரசபடைகளின் போராயுதங்களால் உடைக்கமுடியவில்லை; அரசு தொடுத்த உளவியல் போரும் மக்களிடம் எடுபடவில்லை; இன்னல்களுக்கும்-இடைஞ்சல்களுக்கும் மத்தியில் அவர்கள் போராட்டத்துடனேயே நிற்கின்றனர்.

சிங்கள அரசு எதிர்பார்த்தது போல மக்கள் பணியவில்லை. அதற்கு மாறாக எந்தச் சூழலையும் சமாளித்துவாழும் உறுதியும், எதற்கும் தயாராக இருக்கும் தன்மையும், சிங்கள அரசின்கீழ் பாதுகாப்பாகவோ, சுதந்திரமாகவோ வாழ முடியாது - தமிழீழம் என்ற தனி நாடுதான் இதற்கெல்லாம் ஒரே தீர்வு என்ற அரசியல் உறுதிப்பாடும் மக்களிடம் பெருமளவு உண்டாகி உள்ளது.

மக்களின் மனங்களில் நிகழ்ந்துள்ள இந்த மனப்பிரளயம் மூன்றாண்டுப் போரின் சக்திமிக்க ஒரு விளைவு ஆகும். இது விடுதலைப் போராட்டத்திற்கு மேலும் உத்வேகமும் - உறுதியும் சேர்க்கின்றது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த மனப் புரட்சிக்குப் பிரதான காரணிகளில் ஒன்று, கடற்புலிகளின் வளர்ச்சியும் - செயற்பாடும்தான். கிளாலிக் கடற்பாதையைத் திறந்து குடாநாட்டைச் சூழ இடப்பட்ட இராணுவ முற்றுகையை உடைத்து, மக்களுக்குப் போக்குவரத்தைச் செய்து கொடுத்து கடற்புலிகள் அந்த அற்புதத்தை நிகழ்த்தியுள்ளனர்.

நிலைமை இப்படியிருக்க, மூன்றாண்டுப் பொருளாதாரத் தடையும் ஏறக்குறைய ஈராண்டு குடாநாட்டு முற்றுகையும், இத்துடன் இந்திய - சிறீலங்கா கடற்படையின் கடல்ரோந்தும் ஒன்றுசேர்ந்து புலிகள் இயக்கத்தின் போர் ஆற்றலைச் சிதைத்துவருவதாகச் சில அரசியல்-இராணுவ விமர்சகர்கள் மதிப்பிடுகின்றனர்.

ஆனால் இத்தனை தடைகள் - எதிர்ப்புகள் மத்தியிலும் புலிகள் இயக்கம் தனது போர் வல்லமையை வளர்த்துச் செல்வதுடன், தமிழ் மக்களையும் போர் வாழ்வினூடு வழிநடாத்திச் செல்கின்றனர். மரபுவழிப் போர்முறைகளுக்குரிய பயிற்சிகளையும் அனுபவங்களையும், இந்த மூன்றாண்டுப் போர் புலிகள் இயக்கத்திற்கு வழங்கியுள்ளது. அத்துடன் ஒரு முழுமையான மரபுவழிப் படைக்கு உரித்தான வகையில், புதிய பல சிறப்புப் படையணிகளையும் இந்தக் காலப்பகுதியில் புலிகள் இயக்கம் உருவாக்கியுள்ளது.

அதேபோன்று, புலிகள் இயக்கத்தின் அதிஉயர் போர்முறை வடிவமாகிய கரும்புலித் தாக்குதல்களும் இந்த மூன்றாண்டுப் போரில் அதிகரித்த அளவில் நிகழ்ந்துள்ளன. இதன்மூலம் போராட்டப் பாதையில் குறுக்கே நின்ற பல தடைக்கற்கள் அகற்றப்பட்டுவிட்டன. இவைகள் போராட்டத்திற்கு புத்தூக்கம் அளித்துவருகின்றன.

இவ்விதம், சொந்த மக்களையும் சொந்த வளங்களையும் அடித்தளமாகக் கொண்டு, தனித்துவமான முறையில் புலிகள் இயக்கம் பல்வேறு துறைகளிலும் வளர்ந்து வருகின்றது.

இதேவேளை, அரசியல் ரீதியாகவும் சர்வதேச சமூகத்தின் முன் சிங்கள அரசு இனங்காணப்பட்டுள்ளது.

இப்போரின் தொடக்க சக்திகளாகவும் இதுவரைகாலமும் போர் தொடர்வதற்குரிய காரணிகளாகவும் புலிகள் இயக்கம்தான் உள்ளது என்றே, சிறீலங்கா அரசு உலகிற்குக் கூறிவந்தது.

ஆனால், இந்த மூன்றாண்டுப் போர்க் காலத்தில் தமிழீழத்திற்கு விஜயம் செய்த மேலைநாட்டுத் தொடர்புசாதன நிருபர்கள் மற்றும் சமாதானத்தை ஏற்படுத்த முயன்ற நல்லெண்ணக் குழுக்கள் சிறீலங்கா அரசின் குற்றச்சாட்டுகளில் உண்மை இல்லை என்பதுடன், புலிகளின் அரசியல் நிலைப்பாட்டையும் அறிந்து சென்று அதைச் சர்வதேச சமூகத்திற்குத் தெரிவித்தனர். அத்துடன் தனது நாட்டின் பிரசைகள் என்று கூறிக்கொண்டே தமிழ் மக்கள்மீது சிங்கள அரசு புரியும் அநீதிகளை, ஓரளவிற்கேனும் உலகிற்கு வெளிப்படுத்தியுள்ளனர்.

இந்த மூன்றாண்டுப் போரின் விளைவுகளைச் சுருக்கமாகப் பார்த்தால்,தமிழீழ விடுதலைப் போராட்டம் பல பரிமாணங்களிலும் பல துறைகளிலும் வியக்கத்தக்க வளர்ச்சியைக் கண்டு நிற்கிறது.

புலிகள் இயக்கத்தின் பலமும் அதன் போராற்றலும் அதிகரித்திருப்பதுடன், ஒரு அரசாகச் செயற்படுவதற்குத் தேவையான பல அலகுகளை உருவாக்கிய புலிகள் இயக்கம், அவற்றைப் படிப்படியாக வளர்த்து வருகின்றது.


## இலங்கைத் தீவில் இரண்டு நாடுகள்

**"விடுதலைப் புலிகளின் இராணுவ அணி, சிறீலங்கா இராணுவ அணியைப் போல, அரசியல் அரங்கில் நிலைபேறு அடைந்துவிட்டது. தத்தமக்கென தனித்தனிப் படைகளைக் கொண்ட இரு நாடுகள்தான் இப்போது இலங்கைத்தீவில் உள்ளன. சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு மிகச் சாதாரணமான இந்த உண்மையை ஏற்றுக் கொள்வதே அடிப்படையாக இருக்கும்."**

— 'ராவய' பத்திரிகையில், அதிரியன் விஜயமான என்ற வரலாற்றுத் துறைப் பட்டதாரி.

# பள்ளிக்குப் போன பிள்ளை ஏன் வரவில்லை?

– புதுவை இரத்தினதுரை



இளம்தளிரே!
நீ எங்கே?
எருக்கும்பம் போன்ற
சதைக் கும்பத்துக்குள்ளே
உன்னை எப்படித் தேடுவேன்?
கையெது
காலெது
மெய்யெது என்று,
இனம்காணமுடியாத
இறைச்சிக் குவியலுக்குள்ளே,
உன்னை எப்படி இனம் காணுவேன்.
இளம்தளிரே!
நீ எங்கே?
அன்றும் வழமை போலத்தான்
விடிந்தது.
எழுவான் திசையில் கதிரோன் எழுந்தான்.
அதுபோல் நீயும் அழகாய் எழுந்தாய்.
அம்மா! இன்று பரீட்சை என்றாய்.
படித்தாய்
குளித்தாய்



சாப்பிட்டாய்.
அறைக்குள்ளே சென்றாய்.
வெள்ளைப் புறாபோல்
வெளியே வந்தாய்.
துள்ளிக் கொண்டு
சைக்கிலில் ஏறிச்
சென்றாய்.
வருவேன் என்றே சொல்லிப் போனாய்
ஏனம்மா வரவில்லை?
இளம்தளிரே!
உன்னை எப்படித் தேடுவேன்?
ஐந்தாம் வகுப்பு "ஸ்கொலசிப்பில்"
அதிக புள்ளிகள் பெற்றவள்
ஆன நீ
எப்படித் தெருவில் இப்படிப் போனாய்?
"உத்தம சனாதிபதி"
உனக்களித்த சீருடையைத்தானே
அணிந்து சென்றாய்.
"மேன்மை தங்கிய பெரியவர்"
தந்த
பாடநூல்களைத்தானே சுமந்து சென்றாய்
இருந்தும் நீயேன் இப்படி ஆனாய்?
இராச வீதியில்.....
என் இளவரசிக்கு என்ன நடந்தது?
"சிவப்புச் சிலுவைக் கொடிகள்" பறக்கும்
சிறுவர் பாதுகாப்பு நிதியத்துக்கு
அருகில்
உன்னை ஏன் இப்படிப் பிச்செறிந்தார்கள்.
"சுப்ப சொனிக்" அடித்ததென்றார்கள்
உன்மீதுதான் குண்டுகள் வீழ்ந்த தென்று
அப்பனிவன் எப்படி நம்புவேன்.
பள்ளிப் பிள்ளைகள் செத்ததென்றார்கள்
அவர்களில் நீயும் ஒருத்தியென்று
எப்படி நான் நினைப்பேன்.
"உத்தமர்" தந்த வெள்ளைச் சீருடை
இலவசமாகிய பாடப்புத்தகம்
உன்னிடம் இருந்த போதும்
எப்படி உன்மேல் குண்டுகள் வீசலாம்?
இயந்திரக் கழுகில் ஏறி வந்து
இங்கே குண்டுகள் வீசும் "அவனுக்கு"
எந்தன் துயரம் எப்படிப் புரியும்?
கொழும்பிலிருந்து
அவனை ஏவி
குண்டுகள் வீசெனச் சொல்லும் தளபதி
நாங்கள் துடிப்பதை எப்படி அறிவான்?
"ஞான முருகன் கோவில் மண்டபம்"
"தேங்காய் சண்முகம்" வீடு ம்
வீதியும்
புலிகள் இருக்கும் குகையா?
இல்லையே!
அப்படியாயின் விமானத்திருந்து
எப்படிக் குண்டுகள் எறிந்திட முடியும்?
தமிழனுக்குப் பிறந்த தளிரே!
தமிழிச்சி என்பதற்காகவே
நீ சிதைக்கப் பட்டாய்.
தமிழர் நிலத்தில் வளர்ந்ததுக்காக
பனைமரங்கள் கூடப்
படுகாயம் அடைகின்றன.
மாடி வீடுகள் மரணிக்கின்றன.
சின்னக் குடில்கள் தீக்குளிக்கின்றன.
என்மகளை மட்டும் எப்படி விடுவார்கள்?
ஆம்.
என் உதிரப் பூவே!
தமிழிச்சி என்பதற்காகவே
நீ சிதைக்கப் பட்டாய்.
சங்காரமான "Y 8" போல
"சுப்ப சொனிக்"கும் தீப்பிடித்தெரியும்.
என்றோ ஒரு நாள்
எங்கள் பிள்ளைகள்
இந்தக் கழுகையும் சுட்டு வீழ்த்துவர்.
அன்று நான்
இராச வீதியில் நிமிர்ந்து நின்று
ஆடிப்பாடி அகமகிழ்ந்திடுவேன்.

**27.07.1993 அன்று, யாழ். திருநெல்வேலி இராச வீதியில் சிறீலங்கா வான்படையின் 'சுப்ப சொனிக் F. 7' போர் விம னம் நடாத்திய குண்டுவீச்சின் போது, 4 சிறுவர்கள் உட்பட 6 பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள். இதில் உயிரிழந்த ஒரு சிறுமியினுடைய அப்பாவின் உள்ளத்துவேதனை**

# சமூக பொருளாதார வளர்ச்சித் திட்டம்

சிங்கள அரசின் இனப்படுகொலைகளாலும் இராணுவப் படையெடுப்புக்களாலும் சொந்த இடங்களிலிருந்து விரட்டப்பட்ட தமிழ் மக்களது சமூக – பொருளாதார நன்மை கருதிப் புலிகள் இயக்கம், சமூக – பொருளாதார வளர்ச்சித் திட்டம் என்ற பெயரில், ஒரு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இதன் பிரதான நோக்கம், இடம்பெயர்ந்த மக்கள் தமக்கென ஒரு உறுதியான – தங்கு நிலையற்ற– வாழ்வை அமைக்க உதவுவது தான், 1991 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்த வளர்ச்சித் திட்டம். இப்போது மூன்றாவது ஆண்டில் காலடியெடுத்து வைத்துள்ளது.

இடம் பெயர்ந்த மக்களை அகதி முகாம் வாழ்வு வாழச்செய்யாது, அகதி முகாம்களை குடியிருப்புக்கள் போல மாற்றி, அந்த மக்கள் தன்மானத்துடன் சுயமாக உழைத்து - எவரையும் எதிர்பாராது வாழும்படி செய்ய இந்த அமைப்பு பாடுபடுகின்றது.

## அரையாண்டு அறிக்கை

அண்மையில் இது, 1993 ஆம் ஆண்டுக்குரிய தனது அரையாண்டு அறிக்கையை வெளியிட்டுள்ளது. அதிலிருந்து சில முக்கிய தகவல்களைத் தொகுத்துக் கீழேதருகின்றோம்.

### ★ வீடமைப்பு—புனர்வாழ்வு

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2000இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு, வீடுகள் வேய்வதற்கும் குடிசைகள் புனரமைப்பதற்குமென சுமார் 27 இலட்சம் ரூபாவை, சமூக - பொருளாதார வளர்ச்சித் திட்டம் செலவிட்டுள்ளது. இது தவிர நிவாரணங்கள் என்றும், முதியோர் - ஊனமுற்றோர் - அநாதைகளுக்கென்று உதவித்தொகைகளுமாக சுமார் 23 இலட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

### ★ சுயசார்புத் தொழிற்திட்டம்

இதன்கீழ் 700 குடும்பங்கள் சுமார் 13 இலட்சம் ரூபா வரையில் உதவிகளைப் பெற்றுள்ளன. இதில் 209 குடும்பங்கள் மீன்பிடித் தொழில் உபகரணங்களையும், 448 குடும்பங்கள் வியாபாரம் மற்றும் சிறுதொழிலுக்கான உதவிகளையும், 07 குடும்பங்கள் கோழி வளர்ப்பிற்கான உதவிகளையும் பெற்றுள்ளன. இந்த 700 குடும்பங்களில் தென்தமிழீழத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்த 364 குடும்பங்களும் வடதமிழீழத்தைச் சேர்ந்த 336 குடும்பங்களும் அடங்கும்.

### ★ விவசாயத் திட்டம்

இத்திட்டம் வன்னிப் பகுதியில்தான் கூடுதலாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. கடனுதவி என்ற அடிப்படையில் இது அமைந்துள்ளது. குறைந்தவிலையில் விதைகள், உரம், கிருமிநாசினி, மண்ணெய் போன்றவை வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்படி 47 விவசாயிகளுக்கு மிளகாய்ச் செய்கைக்குரிய கடன் உதவிகளும் 26 விவசாயிகளுக்கு நிலக்கடலைச் செய்கைக்குரிய நிதி உதவிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இதேவேளை முத்தையன்கட்டில் கூட்டுப்பண்ணையொன்றும் இயங்கிவருகின்றது. இதில் 25 குடும்பங்கள் தொடர்ச்சியாக நன்மை பெற்று வருகின்றன. அதேபோல உடையார் கட்டில் உள்ள மூங்கில் ஆற்றை மறித்துக் கட்டிய அணை ஒன்றின்மூலம், அப்பகுதியில் பயிர்ச்செய்கைபண்ணப்படுவதுடன் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் விவசாயத்தில் ஈடுபட்டுமுள்ளன. இந்த அணை 250 அடி நீளமானது.

### ★ கல்வி

இடம்பெயர்ந்தோர் குடியிருப்புகள் மற்றும் பின்தங்கிய கிராமங்களில் சமூக - பொருளாதார வளர்ச்சித் திட்டம் 60 படிப்பகங்களை அமைத்து, அவற்றிற்கு புத்தகங்கள்-சஞ்சிகைகள் - பத்திரிகைகளை ஒழுங்காக வரவழைத்து அந்த மக்களுக்கு அறிவுப்பணி புரிகின்றது. அதேவேளை இப்பகுதிகளில் 50 பாலர் பாடசாலைகள் அமைக்கப்பட்டுள்ளன இவற்றில் 1000 பாலர்கள் கல்வி பயில்கின்றனர். 100 ஆசிரியைகள் கல்வி போதிக்

(11ஆம் பக்கம் பார்க்க)

# மணலாற்றிலிருந்து மாங்குளம் முகாம் தகர்ப்பு வரை

## மாவீரன் கப்டன் மலரவன் (லியோ) எழுதிய வரிகள்

''எங்கட மாமாவை, பெரியப்புவை ஏன் சுட்டவன்கள்?''

''குஞ்சுக்கு ஆர் சொன்னது அவன்கள் சுட்டதென்று?''

''நான் சின்னனா அம்மாவின்ர மடியில இருக்கேக்க வீட்டுக்குள்ள வந்து சுட்டவன்களாம். அம்மாவின்ர கையிலையும் காயம்.''

— இவை மாவீரன் மலரவன் (லியோ) கையெழுத்துப் பிரதியாய் விட்டுச் சென்றுள்ள, அவன் பங்குகொண்ட, போராட்ட நிகழ்வுகளின் வரிகளே. போர் ஒலிகளும் அவை தொடர்பான கள நினைவுகளும் இங்கு இடம்பெற்று, இவை மணலாற்றிலிருந்து மாங்குளம் முகாம் தகர்ப்பு வரையிலான இலட்சியப் பயணத்தில் ஆழ்ந்து செல்கின்றன.

இவை ஒரு தனி மனிதனின் சுயசரிதை அல்ல. முப்பதிற்கும் மேலான சக போராளிகளின் உறவும் நினைவும் இங்கு எமக்குக் கிடைக்கின்றது கரும்புலி லெப். கேணல் போர்க்கிலிருந்து பல பொறுப்பாளர்கள் வந்து கலக்கின்றனர். பொதுமக்களின் அன்பும், ஆதரவும், அவர்களது பங்களிப்பும் நெஞ்சை நெகிழ்த்துகின்றன. அழிக்கப்பட்ட கிராமங்களின் அவலக் காட்சிகளும் ஒரு புறம்.

இனி இராணுவ அரக்கர் மாங்குளம் முகாமில் செய்த கொடுமையை சகபோராளி இதயன் மூலம் கேட்போம் -


''நான் பார்த்தன். முகாமுக்குள் முள்ளுக் கம்பியை நிலத்துக்கு மேலை அரையடி உயரத்தில் அடித்து முள்ளுக்கு மேலை ஒரு பெடியனைக் குப்புறக்கிடத்தி கட்டி வைத்திருந்தாங்கள். கொஞ்சத்தில மச்சான், ஏழெட்டுப்பேர் வந்தாங்கள். ஒருவன் பெடியன்ரை முதுகில ஏறி சவாரிவிட்டான். பொடியன் கத்தின சத்தம் கேட்கேலாது. பின்னர் நெத்தியிலை பிடிச்சு ஒரேயடியா மேலே இழுத்துவிட்டான் - ''அம்மா'' என்ற சத்தம் அரைகுறையாகக் கேட்டுது. கழுத்து முறிஞ்சு கிடந்தான். பிறகு ஆடவே இல்லை. கம்பிக்குக் கீழாலை இரத்தம் சொட்டுச் சொட்டாக ஊத்திச்சு.''

இன்னொரு இடத்தில் போராளிகளின் பிரயாண இன்னல்களும் இடையே ஏற்படும் கோர ஆபத்துக்களும் கண்முன் வருகின்றன. அவ்வித ஓர் இளம் தென்றலின் ஓய்வு இது -

''ரைக்ரரை ஒட்டி வந்த சலாம் திடீரெனக் கத்தினான்,
'பின்னாலை' குதியுங்கோடா: ஸ்ரேறிங் றொட் உடைஞ்சு போச்சுது.' என்று.

நான் (லியோ) ஒரே தாவலாய்த் தாவினேன். அப்படியே குரல் கொடுத்தேன். 'டேய் வசந்து குதியடா! அடிபடப்போகுது!' அது காட்டுக் கத்தலாய் அதிர்ந்தது. ஒருதுளி இரத்தம் என்னில் தெறித்தது. அந்த குழமுனை வீதி வளைவிலிருந்த நாவல் மரத்தில் மோதி பெட்டி புரண்டு கவிழ்ந்து கிடந்தது. சலாமும் இதயனும் இரும்புச் சனியனில் அகப்பட்ட வசந்தனை - அந்தத் தோழனை - உயிர் நண்பனை - மீட்டெடுக்கப் போராடினர் ..''

இந்த இலட்சியப் பயணத்திலே துன்பங்கள் இன்பமாகின்றன. பகிர்ந்துகொள்ளும் சகோதர உணர்வு அனைத்துக்கும் உயிரோட்டம் ஆகின்றது. இதற்கு இந்தச் சிறு சம்பவம் சான்று -



கப்டன் மலரவன் (லியோ)
காசிலிங்கம் விஜிந்தன்
திருநெல்வேலி.

''இராப்பறவைகள் இடையே பறந்துகொண்டிருந்தன. குளிர் உடலைச் சில்லிட வைத்தது. மாஸ்ரர் சரியாய்க் குளிருது. என்ன செய்யலாம்?' என அழகு கேட்டான்.

'அப்பனுக்கு குளிருதோ? ஒன்று செய்யன். அந்தச் சவளாலை மண்ணைத் தோண்டு. நான் உன்ரை மூஞ்சியை மட்டும் வெளியில விட்டுத் தாட்டுவிடுறன்.''

இவ்விதம் கஷ்டங்களெல்லாம் அங்கு கேலியாக மாற்றப்படுகின்றன!

இவ்வித நீண்ட பயணம் மாங்குள முகாமை அண்மித்தபின் போர்த் தாக்குதல் ஒழுங்குகள் மேலும் சரிபார்க்கப்படுகின்றன. அங்கு -

''அவசரமாக கலந்துரையாடலுக்குச் சென்றோம். போராளிகள் வரிசை வரிசையாக அமர்ந்து இருந்தார்கள். அவர்களின் கரங்கள் உறுதியாக, நிமிர்ந்து நிற்கும் விதம்விதமான ஆயுதங்களைப் பற்றி இருந்தன. முகத்தில் என்றுமில்லாத ஒருவித ஒளியும் உத்வேகமும் நிரம்பி வழிந்தது. வாழ்க்கையில் பெறுதற்கரிய பேறு ஒன்றை ஆட்கொண்டுவிட்டதாகத் திளைத்திருந்தனர்''

ஆமாம், அந்நிய போர் வெறியர்கள் கூலிக்கு மாரடிப்பவர்கள் எமது போராளிகள் வேறுபட்டவர்கள். உடலையும் உயிரையும் பணயம் வைத்து போர்க்களத்தில் சமராடுபவர்கள். உடலையும் உயிரையும்விட சுதந்திர பூமியை மேலானதாக நேசிக்கும் இலட்சியவாதிகள். அத்தகைய களம் ஒன்று இதோ -

''ஒரு போராளி, வயிற்றில் காயமடைந்தவன், எனது கையில் சாய்ந்தபடி உயிர்விட்டான. அந்த முகம் தெரியாத சகோதரன், விடியலைத் தேடி வீறுகொண்ட வேங்கை, என் கரங்களில் களப்பலியாகிவிட்டான். அவனது குரல் 'டேய் பூருங்கோடா, கொல்லுங்கோடா, முழு ஆயுதங்களையும் எடுங்கடா' என ஒலித்தபடி என்னை ஊடுருவிக் கடந்து அப்பால் மெதுவாகக் காற்றோடு கலந்தது.''

''இப்படியான சூழ்நிலையை எம் மக்கள் ஒருகணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பத்திரிகைகளை இரைமீட்டபின், ஏதாவது விமர்சனங்களைத் தெரிவித்தபின், தமது சுப வாழ்க்கைக்குள் அமிழ்ந்துவிடுகிறார்கள்'' என்ற வேதனையும் மலரவனின் நெஞ்சத்தை வாட்டத் தவறவில்லை. இன்னொரு புறம் கிராமத்து மக்கள் காட்டும் ஆதரவு, அவர்களது பங்களிப்பு, ஆச்சி அன்போடு ஊட்டும் வெண்பொங்கல் ஆகியனவும் அருமருந்து ஆகின்றன.

இவ்வாறு போர் தொடர்கிறது. உக்கிரப் போர்! அதன் நேரடிப் பங்களிப்பு மலரவனின் எழுத்துமூலம் எம் நெஞ்சத்தில் விழுகிறது.

''உலங்கு வானூர்திகள் 50 கலிபருக்கு ஓய்வு கொடுக்காது தீயைக் கக்கின. தரையிலிருந்து எழும் எம் வேட்டுக்கள் அவற்றை முகில்வரை துரத்திச் சென்றன. குறையாத வீரத்திலக குன்றிமணிகள் குருதிக்கடலில் மிதக்கத் தொடங்கினர். அதனைக் கடந்து கடந்து புலிவீரர் பாய்ந்து போய்த் தாக்கினர். எதிரியின் காப்பரண்கள் ஆர். பி. ஜி. எறிகணைகளால் சிதறிவிழ, கூலிகள் விட்டு ஓடத் தொடங்கினர்.''

அந்த உக்கிரப்போரின் சிகரமாய் ''சக்கை லொறியெடா'' என்று கூறி முடியுமுன் ஒரு ஒளி வெள்ளம் எழுகிறது. சத்தம் காதைப் பிளந்து வானைக் கடந்து செல்கிறது. அந்தக் காவிய நாயகன் ''போர்க்'' கரும்புலியாகி விட்டான்...... முகாம் தகர்வு முடிவுறுகிறது

இவற்றைக் குறித்துத் தந்துள்ள மலரவன் (லியோ) தாம் பங்குகொண்ட சிலாவத்துறைத் தாக்குதல் பற்றியும் எழுத இருந்தார். இதற்குள் பலாலித் தளத்தின் கிழக்குப் பகுதியில் நடைபெற்ற சண்டையில் 23-11-92 அன்று வீரச்சாவு எய்தி மாவீரனானார் என்பதை, இங்கு நினைவு கொள்வோம்.

இவரின் இந்தக் கையெழுத்துப் பிரதி மிக விரைவில் நூலுருவில் வெளிவரவுள்ளது என்ற செய்தி, பெருமகிழ்ச்சியைத் தருகின்றது.

— பெருவழுதி ○

## ஆனையிறவுச் சமர் - இரண்டாவது ஆண்டு நிறைவு:
## நவீன வரலாற்றில் தமிழர்படை சந்தித்த முதலாவது மரபுவழிச் சண்டை

800 இராணுவத்தைக் கொண்டிருந்த ஆனையிறவுத் தளத்தைக் கைப்பற்றப் புலிகள் தொடுத்த ஒரு முகாம் தாக்குதல், இறுதியில் 8000 படையினரைக்கொண்ட சிங்களப் படையுடனான மரபுவழிச்சண்டையாகப் பரிமாணம் பெற்றுவிட்டது.

அதன் விளைவு: இலங்கைத்தீவில் இரண்டு இராணுவங்கள் என்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கருத்து, உலகம் முழுவதும் பரவியது.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் பெரியதொரு பரிமாணத்தில் நடந்த முதற் சமராக, ஆனையிறவுச் சமரே விளங்குகின்றது.

ஏறக்குறைய ஒரு மாதம் நடைபெற்ற இச் சமரில் இராணுவத் தரப்பில் 8000 படையினரும், புலிகள் தரப்பில் 2000 போராளிகளும் பங்குகொண்டிருந்தனர். இவர்களில் சுமார் 1000 பேர் - இருபக்கத்திலும் - உயிரிழந்தனர்.

படையினர் தரப்பில் சுமார் 400 பேர் பலியாக 1000 பேர் படுகாயமடைந்தனர். சிங்களப் படைகளின் 11 கவசவாகனங்கள் சேதமாக்கப்பட்டன. அதேவேளை, இரண்டு சியாமா செற்றிரக போர்விமானங்கள், ஒரு அவ்ரோ, ஒரு உலங்கு வானூர்தி ஆகியன குண்டடிபட்டு சமர்க்களத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டன.

மரபுவழிப் படைக்குத் தேவையான அனைத்து வசதிகளுடனும் இருந்த சிங்கள இராணுவத்துடன், மரபுவழிப் படைக்குரிய அடிப்படை வசதிகளையே கொண்டிராத புலிப்படை ஒரு மரபுவழிச்சமரில் ஈடுபட்டது என்பதே, உண்மையாகும்.

10-07-1991 அன்று முன்னிரவு ஆனையிறவுத் தளம்மீது தொடங்கிய தாக்குதல், 14-07-1991 அன்று வெற்றிலைக்கேணிக் கடற்கரையில் பெருந்தொகையில் படையினர் இறக்கப்பட்டதும், ஒரு மரபுவழிச் சண்டையாக மாற்றமடையத் தொடங்கியது.

ஆனையிறவுத் தளம்மீதான சண்டை, தாக்குதல் போர்முறையிலும் வெற்றிலைக்கேணி புல்லாவெளிச்சண்டை தற்காப்புப் போர் முறையிலுமாக, இருவேறு போர் முனைகளில் இருவேறுவிதமான சண்டைமுறைகள் கடைப்பிடிக்கப் பட்டன.

தாக்குதல் போர்முறையின் நோக்கம் ஆனையிறவுத் தளத்தைக் கைப்பற்றுவது; தற்காப்புப் போர் முறையின் நோக்கம் தளம் நோக்கிய படையின் நகர்வைத் தடுத்து நிறுத்துவது.

ஆ. க. வெ. எனப் பெயரிட்டழைக்கப்பட்ட இச்சமரில், 599 புலிவீரர்களும் மூன்று தேசபக்தர்களும் தமது உயிர்களை அர்ப்பணித்தனர்.

அதேவேளை, தமிழ் இராணுவத்தினதும் சிங்கள இராணுவத்தினதும் சண்டைத்திறனை அளவிட்ட ஒரு சமராகவும், இது அமைந்து விட்டது.

அரச சார்புப் பத்திரிகையான சண்டே ஒப்சேவர் தனது கட்டுரை ஒன்றில், ஆனையிறவுச் சமரில் காயப்பட்ட படையினரில் 720 பேர் துப்பாக்கி ரவைகளினால் காயப்படுத்தப்பட்டுள்ளார்கள் என, உறுதிப்படுத்தியுள்ளது. மற்றையோர் எறிகணை மற்றும் கைக்குண்டுச் சிதறல்களினால் காயமடைந்தனர்.

இதேபோன்று, இச்சமரில் காயமடைந்த சுமார் 1500 புலி வீரர்களில் 480 பேர் மட்டுமே, துப்பாக்கி ரவைகளினால் காயமடைந்தனர். மற்றைய போராளிகள் எதிரி பொழிந்த எறிகணை, விமானக்குண்டு, கடல்பீரங்கிகளினால் காயமடைந்தனர்.

இந்தப் புள்ளிவிபரம் தமிழ் இராணுவத்தினதும் சிங்கள இராணுவத்தினதும் துப்பாக்கிச் சண்டையின் ஆற்றலை ஒப்பீடு செய்து, புலிகளின் வீரத்தை - திறமையை - வெளிப்படுத்திக் காட்டியுள்ளது.

8000 படையினரின் கைகளில் இருந்து வெடித்துப் பறந்த இலட்சக்கணக்கான ரவைகள் காயப்படுத்தியது, ஆக 480 புலிகளைத் தான்.

ஆனால் 2000 புலிவீரர்களது கைகளில் இருந்து வெடித்து விரைந்த ரவைகள், 720 இராணுவத்தினரைப் பதம் பார்த்தன.

அதேவேளை, வெற்றிலைக்கேணியிலிருந்து ஆனையிறவு தளம்வரையிலான 8 கி. மீ. தூரத்தைக் கடக்க சிங்களப்படைகளுக்கு 24 நாட்கள் பிடித்தன.

அதாவது, ஒரு மணிநேரத்திற்கு 14 மீற்றர் தூரம் என்ற அளவிலேயே சிங்களப் படைகளால் நகரமுடிந்தது. அந்தளவுக்கு புலிவீரர்களின் எதிர்ப்பு நடவடிக்கை அமைந்திருந்தது.

புலிகள் இயக்கத்தின் இராணுவ வளர்ச்சியை உலகம் கண்டுகொண்ட இந்த வரலாற்றுச் சமர் முடிந்து, இரண்டு வருடங்கள் பூர்த்தியடைந்துவிட்டன. இச்சமரில் வீரச்சாவெய்திய புலிவீரர்களை நினைவு கூரும் முகமாக, கொடிகாமத்தில் ஒரு நினைவாலயம் எழுப்பப்பட்டுள்ளது. இந்த நினைவாலயம் ஆனையிறவுச் சமரையும் அதில் வீரச்சாவடைந்த புலிவீரர்களையும் என்றென்றும் நினைவுகூர்ந்தபடி இருக்கும். ○

# சக்கை லொறி - சீதனத்திற்கு

மாவீரர் துயில்கொள்ளும் இல்லம். அந்த மாமணிகள் தம் அழியாத குரல்கொண்டு உரையாடுகின்றனர்.

இன்று மீண்டும் ஒரு வியப்பு; மகிழ்ச்சிப் பெருக்கு!

"உண்மையாடி? அப்படிச் செய்தாளா?"

"செய்ய நினைத்தாள்; செய்யவில்லை"

"ஏன்?"

"அதுதான் பெண்ணினத்தின் சாபக்கேடு."

எழுந்த வியப்பும் மகிழ்வும் மங்கிக் குறைந்தன. ஆனால் ஒரு மௌன உறுதிப்பாடு மேலும் சுடர்விட்டது.

"கலங்காமற் சொல் அம்மா. நடந்ததை விரிவாகச் சொல்." கூட நின்ற மறவனின் குரலும் கலந்து கொண்டது; கணீரென்றன ஏனைய திலகங்களின் குரலும்.

"அது நடந்த பின் சில காலம் களமாடியே இங்கு வந்தேன். ஆனால் அந்த அநீதியை, அக்கிரமத்தை, மறக்க முடியாது!"

"அதைத்தான் சொல்லடி!" உரிமைக் குரல்கள் மேலும் இடித்தன.

"அது அரசியற் களமல்ல - எம் சமுதாயக் களம். அந்நிய எதிரியிலும் கூடிய கொடுமை இங்குதான்!"

"சொல் நீ - "

"அங்கு எம் ஊரில் ஒரு கல்யாணம்!
சாதகம் பார்த்து,
பெண்ணின் நிற வடிவு பார்த்து,
அந்த ஆண்மையற்ற மாப்பிளைக்கு வீடு, காசு பல லட்சம், நகையாக பவுண் பலசேர்த்துக் கொடுத்து -
வேதம் ஒலிக்க ,மேளம் முழங்க, இதற்குள் கொடுத்த நகையில் ஏதோ குறை என உள்ளே குழப்பம் எழ -
கூடப்பிறந்த தங்கை தன் கைக்காப்பைக் கழற்றிக் கொடுத்தாளாம்!"

"பின் என்ன நடந்தது?"

"பெண்ணின் கழுத்தில் அவன் தாலி கட்டக் குனிந்த அந்த வேளையில்தான், நெஞ்சம் குமுறி நின்ற தங்கை கூவினாளாம் -

'அதை அக்கா, நீ அவன் கழுத்தில் கட்டு,
அவன் கழுத்தில் கட்டு!' என.

"அப்போ?" ஆவற் குரலொன்று இவ்விதம் துடித்தது.

"மணப்பெண்ணும் தன்னுள் இதனையே எண்ணினாள், ஆனால் செய்யவில்லை. குனிந்த பெண்ணாகவே இருந்தாள்!

ஆனால் மணப்பந்தர் கெம்பிற்று! பெண்வீட்டார் குனிந்த பதுமைகளாயினர். ஆண் வீட்டார் இரணியர் ஆகினர், தரகர் உட்பட!"

"பின் என்ன நடந்தது?"

"கெஞ்சிக் கூத்தாடிய பெண்வீட்டாரை ஏசிவிட்டு, பெற்ற சீதனத்துடன் கட்டிய பெண்ணையும் இழுத்துச் சென்றானாம் மணமகன், தனது பெற்றார் சுற்றத்துடன்!

இனி அவள் அந்த வீட்டுக்கு வேலையாள், நிரந்தர அடிமைதான்!"

"பிரலாபம் வேண்டாம். செய்ய வேண்டியதைச் சொல்!" மாவீரரின் முழக்கம் இவை!

இவ்வேளை ஒரு தரகர் தவறுதலாக விட்ட காகிதத் துண்டு காற்றிலே பறந்து வந்து நின்றது;சாட்சியாய் வந்துநின்றது. அதில் இருந்த குறிப்பு 1- 'வெளிநாட்டு மாப்பிள்ளை. வடிவான பெண்ணாக இருக்கவேணும். பதினைந்து லட்சம் கொடுத்தால் எடுக்கலாம்.'

குறிப்பு 2 - 'பெடியள் பலர் சண்டையிலை செத்ததாலை இங்கை உள்ளவை பெரும் கிராக்கி எழுப்பினம். எண்ணாத சீதனம் கொடுத்தால்தான் மாப்பிள்ளை எடுக்கலாம். எண்டாலும் பார்ப்பம்......'

"துரோகிகள்! பேடிகள்!"என முழங்கியது அந்தப் புனித சூழல். "இதற்கு வழி என்ன?" என மேலும் ஒரு ஆர்த்தல் முழக்கம்.

அந்தப் புதிய வனிதையே பதில் சொன்னாள் -

"அன்று இதனை இடித்துக் கூவியதற்கே என்னை அக்காவின் மணப்பந்தர் ஒதுக்கியது. ஆனால் -"

"அந்தத் தங்கை நீதானா?"

"ஆமாம். ஆனால் அது பெரிதல்ல. இனிச் செய்ய இருப்பதைச் சொல்லுகிறேன்."

"சொல்! சொல்!" என்றன அனைத்தும்.

"இது பற்றி நெடுகப் பேசி வரும் பிரச்சாரகர்களை இனித் தூணில் கட்டிவிட்டு -செயல் வெளிவரட்டும்; தீவிர செயல்! தீயதைத் தகர்த்தெறியும் நடைமுறை!"

"அதற்கு?"

ஒற்றைத் துவக்கும் கட்டுத்துவக்கும் போதாது 'சிங்கிள்சொட்'டும் 'ஒட்டோ அடி'யும் போதாது ! சீதனத் தகர்ப்பிற்கு இனி வேண்டுவது - சக்கை லொறிதான்!"

"ஆம், சக்கை லொறிதான்!" மாவீரரின் ஒருமித்த ஒலி இவ்வாறு எழுந்தது.

எம் இதயத்திலும் இது கேட்கிறதல்லவா?

— நாக. பத்மநாதன்.

## ஓயாத அலைகளில்...

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

"விடுதலைப் புலிகளின் வரலாற்றில் கடற்புலிகள் முக்கியமான ஓர் அத்தியாயம்" என்று தலைவர் அவர்கள் சொல்கின்றார். "கடற்புலிகளின் வளர்ச்சியில் சாள்ஸ் ஒரு பிரதான உந்துவிசை" என்கிறார் தளபதி சூசை.

சாள்ஸ்!

ஒரு சிறந்த மனிதனாக, தேசப்பற்றும் உறுதியும் மிக்க போராளியாக, நட்புக்கொள்கிறவர்களுக்கு இனிய நண்பனாக, எதிரி அதிர சண்டைகளை வழிநடத்தும் தளபதியாக, புதியனவற்றைப் படைக்க முயலும் ஒரு தொழில்நுட்ப நிபுணனாக, போராளிகளுக்கு அறிவூட்ட விழையும் ஆசானாக, அலைகளைத் தோற்கடிக்கும் படகோட்டியாக, அட்டகாசமான சமையல்காரனாக, மக்களுக்குப் பணி செய்துநிற்கும் சமூகப் பற்றாளனாக... இன்னும்... இன்னும்... எல்லாவற்றுக்கும் பொருத்தமானவன் அந்த விடுதலைப் புலி.

சின்னக்குழந்தையாகத் தவழும் கடற்புலிகளை, பெரும் படைஅமைப்பாகக் க்ட்டி எழுப்பும் கனவுகளோடு வாழ்ந்தானே அந்த வீரன்! தன்னையே உருக்கி அதன் அடி வேரில் பாய்ச்சியல்லவா அதனை நெடிதுயரச் செய்துகொண்டிருந்தான். ஏன் திடீரென எங்களை விட்டுப் போனான்?

கண்ணுக்குள் சுழல்கிறது அந்த நிலவு முகம். இறுதி நாட்களில் கிளாலிக் கடலில், எதிரிக்கு முன்னால் அது செஞ்சூரியனாய்ச் சுட்டெரித்தது.

24-06-1993. அன்றிரவு -

20 மைல் நீளப் பெருங்கடல். படகோட்டம் தொடங்கிவிட்டது. ஏக்க விழிகளோடு படகுகளில் மக்கள் தமிழரின் பிணந்தின்னக் காத்திருக்கும் சிங்களச் சுறாக்கள். மக்களைக் காக்கும் பணியில் அவர்களின் குழந்தைகள். அவர்களை வழி நடாத்தியபடி களத்தில் சாள்ஸ்.

ரவைகளைப் பொழிந்தபடி விரைந்து வருகின்றன எதிரியின் படகுகள். நேருக்குநேர் எதிர்கொள்கின்றன புலிகளின் படகுகள். பிப்ரியும், எல் எம். ஜியும் தணல் கக்கிய ஒரு படகில் சாள்ஸ். இருள் வானைக் கிழித்தன ஒளிக்கோடுகள். அதிர்ந்துபோனான் எதிரி!

எதிர்பாராத கணம்! திடீரென எல். எம். ஜி. இயங்க மறுத்தது. அது கைவிட்டுவிட்டது. சாள்சின் கையிலிருந்து முழங்கிய பிப்ரியை மட்டும் நம்பி எதிரியை 'நெத்தி முட்ட' நெருங்கியது படகு! இடைவெளி நன்றாகக் குறுகிவிட்ட நிலையில் இன்னொரு எதிர்பாராத கணம். பிப்ரியும் இயங்க மறுத்து விட்டது. சாள்ஸ் திரும்பத் திரும்பக் கோக் பண்ணி கோக்பண்ணி அடிக்கவும், அது பிசகிக்கொண்டேயிருந்தது. எதுவுமே செய்யமுடியாத சூழ்நிலையில் - படகைப் பக்கவாட்டாகத் திருப்பி எடுக்க முயல, நேவியோடு போராடப் பிப்ரியோடு போராடிக் கொண்டிருந்த சாள்சின் உடலைத் துளைத்துச் சென்றன ரவைகள்! உடனடியாகக் கரையை நோக்கித் திருப்பப்பட்டது படகு.

இரத்தம் வெளியேறிக்கொண்டிருந்தது. நீளக் கடல். ஓட ஓடக் கடலும் நீண்டுகொண்டேயிருக்க,இரத்தப்பெருக்கு அதிகமாகிக்கொண்டே போனது. சண்டையின் துவக்கத்திலேயே நாங்கள் மகானை இழந்துவிட்டோம். படகு கரையைத்தொடும்போது எங்கள் சாள்சும் எங்களை விட்டுப் போய்விட்டான்.

மக்களின் படகுகள் பாதுகாப்பாக மறுகரையை அடைந்துகொண்டிருந்தன.

ஓ...சாள்ஸ்! எங்களின் கடற் போர்த் தளபதியே! உனது நினைவுகளையும் கனவுகளையும் எங்களோடு விட்டுச் சென்றுவிட்டாய். நீ சுமந்த இலட்சியத்தை நாங்களும் சுமக்கின்றோம். அதை அடையும்வரை நாங்கள் ஓய மாட்டோம்; உன்னைப் போலவும் - கடலின் அலையைப் போலவும்!

## தமிழ்நாட்டு ...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த இந்தி எதிர்ப்புப் பிரச்சாரம் தமிழ்நாட்டின் தென்பகுதி மாவட்டங்களிலேயே தீவிரமாக நடைபெறுகின்றன. திரு. வை. கோபாலசாமியின் செல்வாக்கும் இந்தப்பகுதிகளிலேயே நிறைந்து காணப்படுகின்றது.

காவிரி நீர்ப் பிரச்சினையாலும் இந்தி எதிர்ப்பு உணர்வாலும் தென்தமிழ்நாட்டுத் தமிழர்களிடையே தமிழ்த் தேசிய எழுச்சி புத்துயிர் பெற்று வருகின்றது.

இத்தமிழ்த்தேசிய எழுச்சிக்கு திறமையும் மக்கள் ஆதரவும் நிறைந்த திரு. வை. கோபாலசாமி தலைமை கொடுக்கின்றார் என்ற செய்தி பரவும் போதே, தமிழின விரோதிகள் கலவரமடைந்தனர்.

திரு. வை கோபாலசாமி பேசும் கூட்டங்களுக்கு இளைஞர்கள் பெருமளவில் வருகின்றனர். அவரது அனல்பறக்கும் பேச்சுக்கள் தமிழ்த் தேசியத்துக்கு புத்துணர்ச்சி ஊட்டும் வகையிலேயே அமைந்திருக்கின்றன. அதேவேளை திரு. வை. கோபாலசாமி தமிழீழ தேசியத்தின் நண்பனாகவும் இருந்து வருகின்றார் என்ற செய்தியும், தமிழின விரோதிகளுக்கு அச்சமூட்டியுள்ளது. இதனால் திரு. வை. கோபாலசாமியின் எழுச்சியை முறியடிக்க உள்ளேயும் வெளியேயும், சதியும் கழுத்தறுப்புகளும் நடைபெறுகின்றன.

இந்தச் சூழ்ச்சிகளை திரு. வை. கோபாலசாமி எப்படி எதிர்கொண்டு முறியடித்து வெற்றி பெறப்போகின்றார் என்பதே, உலகத் தமிழர்களின் எதிர்பார்ப்பாகும்.

## சமூக பொருளாதார...

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

கின்றனர். அத்துடன் 50 கல்வி வளர்ச்சிக்கழகங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றில் 2000 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். இந்த இரண்டு வேலைத்திட்டத்திற்கும் மாதம் ஒன்றிற்கு சராசரி ஒரு இலட்சம் ரூபாவை ச. பொ. வ. திட்டம் செலவிடுகின்றது.

### ★ வைத்திய நிலையம்

முல்லைத்தீவு மாவட்டத்தில், மாவீரர் வைத்திய நிலையம் என்ற பெயரில் ஒரு வைத்திய சிகிச்சை நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இங்கே மாதமொன்றிற்கு சராசரி 1000 நோயாளிகள் சிகிச்சை பெறுகின்றனர். அத்துடன் சூழல் சுகாதாரம் பேணல், கர்ப்பிணித் தாய்- பாலூட்டும்தாய்-குழந்தைகளுக்கான போசாக்குத் திட்டம் என்பனவும் நடைமுறையில் உண்டு. மாதமொன்றிற்கு 1000 பாலர்களும் 100 தாய்மாரும் இப் போசாக்குத் திட்டத்தால் பயனடைகின்றனர்.

# "தமிழீழ காவல்துறை மக்களின் சொத்து"



## தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் அவர்களுடன் ஒரு செவ்வி

○ தமிழீழ காவல்துறையின் தோற்றம்-வளர்ச்சி - அதன் செயற்பாடுகளைச் சுருக்கமாகக் கூற முடியுமா?

□ தமிழீழ விடுதலைப் போராட்டம் பெற்று வரும் பரிணாம வளர்ச்சியின் ஒரு முக்கிய கட்டம் தான் காவல்துறையின் பிறப்பாகும் 1991 யூனில் செயற்படத்தொடங்கிய தமிழீழ காவல்துறை தனது 2 வருட சேவையை இனிதே முடித்துக் கொண்டுள்ளது. தமிழீழத் தேசியத் தலைவரின் நேரடிக் கட்டுப்பாட்டிலும் - கண்காணிப்பிலும் இருந்துவரும் இவ் அமைப்பு புலிகள் இயக்கத்தால் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் சட்டம் - ஒழுங்கைப் பேணிப்பாதுகாக்கின்றது. அத்துடன் தேசிய விடுதலையுடன் கூடிய ஓர் சமுதாய மாற்றத்திற்கான வேலைத் திட்டங்களிலும் காவல்துறை ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

குடாநாட்டில் காவல்துறையின் 9 பணிமனைகளும், வன்னிப் பகுதியில் 3 பணிமனைகளும் இயங்கி வருகின்றன இதைத்தவிர, குடாநாட்டில், வீதி விபத்துக்களைத் தடுப்பதற்கும் - கண்காணிப்பதற்குமாக நகரப் போக்குவரத்துப் பிரிவு, என்று ஒரு பகுதியும், பாரிய குற்றச் செயல்களைக் கையாள்வதற்கென குற்றப் புலனாய்வுப் பிரிவு என்ற ஒன்றும், குடியியல் வழக்குகளை விசாரிப்பதற்காக விசேட விசாரணைப் பிரிவு என்றும் பல சிறப்புப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. நன்கு பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்கள் இப்பிரிவுகளில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். காவல்துறையின் பணிமனைகள் அனைத்தும் இரவு - பகல் எனப் பாராது 24 மணி நேரமும் மக்களுக்குச் சேவைசெய்துவருகின்றன.

○ தமிழீழ காவல்துறையின் சாதனை பற்றி ஏதாவது கூறமுடியுமா?

□ தமிழீழ காவல்துறை செயற்படத்தொடங்கியதிலிருந்து சகலவிதமான குற்றச் செயல்களும் பெரியளவில் குறைந்துள்ளன. விசேடமாக பெண்கள் மீதான துன்புறுத்தல்களும் தொல்லைகளும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன. களவுகள் - வீதி விபத்துக்கள் குறைந்துள்ளன:

வீதி விபத்துக்களைத் தடுப்பதும் - தவிர்ப்பதும் பற்றிய விரிவுரைகள் பாடசாலைகளிலும்- ஏனைய நிறுவனங்களிலும் வழங்கப்பட்டுள்ளன, அத்துடன் நெடுங்காலமாக சிறீலங்கா நீதி மன்றங்களால் தீர்க்கப்படாது குவிந்துகிடந்த குடியியல் சம்பந்தமான வழக்குகள் மனிதாபிமான அடிப்படையில் தீர்த்துவைக்கப்பட்டுள்ளன.

அதேவேளை சிறீலங்காவின் காவல்துறையைப் போலில்லாது, எமது காவல்துறையின் சில பணிமனைகளின் பொறுப்பாளர்களாக, பெண் உறுப்பினர்களே பணிபுரிகின்றனர். சுன்னாகம், கோப்பாய், கிளிநொச்சி, சாவகச்சேரி ஆகிய பணிமனைகள் இதற்கு உதாரணம்.

○ தமிழீழ காவல்துறையின் சில பணிமனைகளில் பொதுமக்கள் தமது விசாரணைகளுக்காக அதிகநேரம் காத்திருப்பதாக சிலர் கருத்துத் தெரிவிக்கின்றனர். இதைப்பற்றி உங்களது கருத்து என்ன?

□ குறித்தவொரு முறைப்பாட்டுடன் தொடர்பான எதிர்த்தரப்பினரை குறிப்பிட்ட ஒரு நாளில் பணிமனைக்கு சமுகமளிக்கும்படி கட்டளை அனுப்புகின்றோம். ஆனால், சில எதிர்த் தரப்பினர் தவணைகளுக்கு வருவதில்லை. அதற்கு அவர்கள் பல காரணங்களைக் கூறுகின்றனர். அக்காரணங்கள் இப்போர்ச் சூழல் கருதி ஏற்றுக்கொள்ளக் கூடியவைதான். ஆனால் பலர் இவற்றை ஒரு சாட்டாகவைத்துவிசாரணைக்கு சமுகமளிக்காது இழுத்தடிக்கின்றனர். அல்லது நேரம் தவறிப் பணிமனைக்கு வருகின்றனர். இதனால் முறைப்பாட்டுக்காரர்கள் பணிமனைகளில் அதிகநேரம் காத்திருக்கவேண்டி ஏற்படுகின்றது. அல்லது குறித்த தவணைகளுக்கு வராமல்விடுவதால் விசாரணைகள் தாமதப்படுவதும் உண்மை. இக்குறைபாடுகளை இயன்றளவு குறைக்கப் பாடுபடுகின்றோம்.

○ சில முறைப்பாடுகளுக்கு காவல்துறையினரால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை என ஒரு கருத்து உள்ளது. இது உண்மையா?

□ பணிமனைகளுக்கு வரும் முறைப்பாடுகளை நாம் நான்கு வகைகளாகப் பிரித்து அவற்றைக் கையாளுகின்றோம். பாரிய குற்றங்கள், சிறு குற்றங்கள், குடியியல் சம்பந்தமான முறைப்பாடுகள், வீதிவிபத்து சம்பந்தமான முறைப்பாடுகள் என வகைப்படுத்தியுள்ளோம்.

பாரிய குற்றங்கள், மற்றும் வீதிவிபத்துக்கள் சம்பந்தமான முறைப்பாடுகள் கிடைத்த உடன் சம்பவம் நடந்த இடத்திற்கே சென்று நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றோம்.

ஆனால், சிறு குற்றங்கள் மற்றும் குடியியல் சம்பந்தமான முறைப்பாடுகளுக்கு நடவடிக்கைஎடுப்பதற்கு சிறிது காலதாமதம் ஆகின்றது, அதாவது ஒரு வாரகாலம் செல்கின்றது. ஆள் பற்றாக்குறை போன்றசில காரணங்கள்தான் இதற்குக் காரணம்

○ சிலமுறைப்பாடுகளை விசாரிக்கும்போது காவல்துறை உறுப்பினர்கள் பக்க சார்புள்ளவர்களாக நடந்துகொள்கின்றனர் என சிலர் குறைபட்டுக்கொள்கின்றனர். இதுபற்றிய தங்கள் கருத்து என்ன?

□ ஒரு நீதியான விசாரணையின் பின். நடுநிலையாக நின்று தீர்ப்பை வழங்கும்போது ஏதாவது ஒரு பகுதியினர் மனவேதனைப்படுவது அல்லது அதிருப்திப்படுவது தவிர்க்கமுடியாதது சிலவேளைகளில் நீதியைப் பெற்றவரே தான் எதிர்பார்த்தது கிடைக்காதுவிடின் காவல்துறையின் விசாரணை உத்தியோகத்தர் பக்கச்சார்பு எடுத்துவிட்டார் என்று குறை கூறுகின்றனர்.

தீர்ப்பு வழங்கப்படும்போது சாட்சியங்களின் அடிப்படையிலும் விசாரணைசெய்த உத்தியோகத்தர்களின் அவதானத்தின் பிரகாரமும்தான் தீர்ப்பு வழங்கப்படுகின்றது. அவ்வாறு வழங்கப்படும் தீர்ப்பு பிழை என யாராவது கருதினால் காவல்துறைப் பொறுப்பாளருக்கோ, தேசியத் தலைவருக்கோ மேன்முறையீடு செய்யலாம். உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

○ காவல்துறை உறுப்பினர்கள் யாராவது தவறு செய்தால் அவர்கள் மீது எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

□ காவல்துறை உறுப்பினர்களுக்கெதிரான பொதுமக்களின் முறைப்பாடு, காவல்துறைப் பொறுப்பாளரால் விசாரிக்கப்படும். அல்லது அவரால் நியமிக்கப்படும் அவரது பிரதிநிதியால் விசாரிக்கப்படும். விசாரணையின் பின் குறித்த உறுப்பினர் தவறு செய்திருப்பது கண்டுபிடிக்கப்படின் அவர் குறிப்பிட்ட காலத்திற்கு காவல்துறையால் நிர்வகிக்கப்படும் சீர்திருத்தப்பண்ணைக்கு அனுப்பப்படுவார். அல்லது அறிவுறுத்தல் வகுப்புகள் தொடர்ச்சியாக நடாத்தப்படும். பாரதூரமான குற்றமாக இருப்பின் குற்றத்திற்கேற்ப கடும் தண்டனை வழங்கப்படுவதுடன் சேவையில் இருந்தும் நீக்கப்படுவார்.

○ விசாரணையின்போது தம்கருத்தையோ, நிலையையோ விசாரிக்கப்படுவோர் எடுத்துச் சொல்ல முடிவதில்லை. அதற்குள் விசாரணை உத்தியோகத்தர் சீற்றம் கொள்கின்றார். அவர்களது பேச்சைக் கேட்டுவிடுவதே புத்தி என்று சிலர் கதைப்பதாக அறியமுடிகின்றது. இதைப் பற்றி நீங்கள் ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா?

□ தமிழீழ காவல்துறையின் எந்த ஒரு காவல் பணிமனையிலும்பொதுமக்களில் யாராவது அவர் வாதியாகவோ அல்லது பிரதிவாதியாகவோ இருந்தாலும் அவர்களுக்கு தமது முழுக் கருத்துக்களையும் சொல்வதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. இதை யாரும் மறுக்கமுடியாது. அவ்வாறு தமது கருத்துக்களைத் தெரிவிக்கும்போது எந்த ஒரு காவல்துறை உறுப்பினராவது சீற்றம் கொண்டால் அல்லது அவர்களுக்கு அச்சந்தர்ப்பத்தை வழங்க மறுத்தால், அவ்வுறுப்பினர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறான சில முறைப்பாடுகள் எனக்கு கிடைக்கப்பெற்று சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்துள்ளேன். அதேவேளை தீர்ப்பு தமக்குச் சாதகமாகக் கிடைக்காததால் விரக்தியடைந்த சிலர் இவ்விதம் காவல்துறை உறுப்பினர்கள் மீது பழி சுமத்துகின்றனர் காவல்துறையைப் பற்றி குறைகூறுபவர்கள் பெரும்பாலும் இந்த ரகத்தைச் சேர்ந்தவர்களாவே இருக்கின்றனர்.

○ நீதிமன்றங்கள் இல்லாத இன்றைய நிலையில் காவல்துறை உத்தியோகத்தர்களே பலகட்டங்களில் விசாரணையின் முடிவையும் - தீர்ப்பையும் அளிக்கும் கடமையை மேற்கொள்கின்றார்கள். இவர்களுக்கு இதற்கான நீதித்துறை அறிவோ, அவ்வகையிலான பயிற்சியோ வழங்கப்படுகின்றதா?

□ இன்றைய சூழ்நிலையில், விடுவிக்கப்பட்ட எமது மண்ணில் பாரிய குற்றங்கள் மிகமிக அரிது. சிறுசிறு குற்றங்களே அதிகமாகக் காணப்படுகின்றன. இவ்வாறான சிறு குற்றங்களை, பிணக்குகளை தீர்த்துவைப்பதற்கான பயிற்சியும்-அறிவும்-எமது உறுப்பினர்களிடம் உண்டு.

எங்களிடம் வந்துசேரும் பாரிய குற்றங்களுக்கான முறைப்பாடுகளைப் பொறுத்தமட்டில் அவை நன்கு தீர விசாரிக்கப்பட்டு விசாரணை அறிக்கை நடுவப் பணியகத்திற்கு தீர்ப்புக்காக அனுப்பிவைக்கப்படும். காவல்துறையின் நடுவப் பணியகத்தில் அவ்விசாரணை அறிக்கை நன்கு பரிசீலிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்படுகின்றது. இத்தகைய தீர்ப்புகளை வழங்குவதற்கான ஆற்றலும் - அறிவும் - அநுபவமும் உள்ளவர்கள் எமது காவல்துறையில் பணிபுரிகின்றனர்.

○ தமிழீழ காவல்துறை, பெண்களுக்கு சார்பாக நீதி வழங்குகின்றது என்றொரு கருத்து நிலவுகின்றது. இது ஏன்? எனக்கூறமுடியுமா?

□ இதுவரைகாலமும் எந்த ஒரு நீதி அமைப்பாலும் ஏறெடுத்துப் பார்க்கமுடியாத பெண் ஒடுக்குமுறையை புலிகள் இயக்கம் தீவிர கவனத்தில் எடுத்துள்ளது. பெண் ஒடுக்குமுறை - பெண்கள் மீதான தொல்லைகள் என்பன ஒரு ஆணுக்குள்ள உரிமை போன்றே பேசப்பட்டு வந்தன. அதுதான் சமூக நீதியாகவும் இருந்தது. ஆனால் புலிகளின் சகாப்தத்துடன் தோன்றிய தமிழீழ காவல்துறை இதை ஒரு குற்றச்செயலாக சமூக அநீதியாகக் கருதி அதற்கெதிராக தீவிர நடவடிக்கைகளையும் எடுத்து பெண் உரிமையை நிலைநாட்ட முயன்று வருகின்றது.

இந்த முற்போக்கான - சமத்துவமான செயல் ''தமிழீழக் காவல்துறை பெண்களுக்கு சார்பாக நீதி வழங்குகின்றது'' என்ற கருத்தை ஏற்படுத்தியுள்ளது.

○ காவல்துறையின் சிறப்பான செயற்பாட்டுக்கு மக்களின் பங்களிப்பு அவசியம் தேவை. இது உங்களுக்கு கிடைக்கின்றதா? அதேவேளை எங்ஙனம் மக்கள் தமது பங்களிப்புகளை நல்கலாம் என நீங்கள் எதிர்பார்க்கின்றீர்கள்?

□ பொதுமக்களிடமிருந்து கணிசமான அளவில் எமக்கு உதவிகள் கிடைப்பதால்தான் குறைந்தளவு உறுப்பினர்களை வைத்துக்கொண்டும் அதிகளவு பிணக்குகளையும் - குற்றச் செயல்களையும் சுலபமாகத் தீர்த்துவைக்கக் கூடியதாக உள்ளது.

தமிழீழ காவல்துறையானது தமிழீழ மக்களின் காவல்துறைதான். அதன் வளர்ச்சியிலும்- விரைவான செயற்பாடுகளிலும் உதவிபுரிவது மக்களது கடமையாகும்.

காவல்துறை தொடர்பாக சிலரால் பரப்பப்படும் விசமப் பிரச்சாரங்களை கட்டுப்படுத்தும் கடப்பாடும் மக்களிடமே உண்டு. காவல்துறை உறுப்பினர்களுடன் பிரச்சினைகள் அல்லது முரண்பாடுகள் இருக்குமாயின் அவற்றை உரிய இடங்களுக்குத் தெரியப்படுத்தி அவற்றிற்குத் தீர்வு காண வேண்டுமேயொழிய பொறுப்பற்றமுறையில் மற்றவர்களுடன் கதைத்துத் திரிந்து காவல்துறைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தக்கூடாது.

ஏசாவது ஒரு நாட்டில் காவல்துறை திறம்படச் செயலாற்றுகின்றது என்றால் அதன் அர்த்தம் அந்நாட்டின் மக்கள் நாட்டுப்பற்றுடனும் பொறுப்புணர்வுடனும் செயற்பட்டு காவல்துறைக்குப் போதிய ஒத்துழைப்பு வழங்குகின்றனர் என்பதேயாகும். ○

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்